Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஜூலை-2024
நாடார் :14
முரசு :7



இந்தியன் INDIAN NADAR MURASU

# நாடார் முரசு

விலை ரூ.15/-



## ஜூலை 15 பெருந்தலைவர் அவதார திருநாள்

### வேறெவர் இணை உண்டோ?

தீதுசெய வடக்குவந்து செப்பி னாலும்
சிறிதேனும் ஒப்பாமை அவர்பால் கண்டோம்!
வேதக்கை காட்டி, இது தணல்என் றாலும்
வேகாது விருதுநகர் பருப்பாம் என்றே
ஓதிடுமோர் ஆழந்தபெருங் கொள்கை யுள்ளார்,
உயர்நோக்கும் இனப்பற்றும் உயிராக் கொண்டார்,
சேதிஇனி ஒன்றுண்டு காம ராசர்
திராவிடத்துத் திருமேனி இன்னும் என்ன?

- பாவேந்தர் பாரதிதாசன்

## பெருந்தலைவர்
## ஐயா கு. காமராஜர் அவர்களின்
## 122-வது பிறந்தநாள் விழா

## மாபெரும் இரத்ததானம் வழங்கும் விழா மற்றும்
## உறவின்முறை ஆண்டு விழா

விழாவை தொடங்கி வைப்பவர்:
மாண்புமிகு.K.N.நேரு அவர்கள் தமிழக நகர்புற வளர்ச்சி மற்றும்
குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்



**அய்யா வழி பூஜித குரு**
**ஸ்ரீ பால பிரஜாபதி அடிகளார்.**

நாள் : 14.07.2024 (ஞாயிற்றுகிழமை) நேரம் : காலை 12.00 மணி

இடம் : திருச்சி நாடார் உறவின் முறை L.R.R. திருமண மண்டபம்,
V.N. நகர், முதல் கிராஸ், சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி. செல் : 73734 76667

| M. இளவேந்தன் | C. சண்முகதுரை | C. சரவணன் | வக்கீல் N. சிவா |
|---|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் | இணைச்செயலாளர் |
| செல் : 98424 62177 | செல் : 98424 76667 | செல் : 94425 32227 | செல் : 99945 59965 |

திருச்சி நாடார் உறவின் முறை சங்கம், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்


இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!!
என் இனிய அன்பு மகள்அக்ஷராவுக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இப்படிக்கு
S.KESAVAVISWANATHAN (USA).,
S/O.சிவந்தி நாடார் அயன்புரம்
மகள்களை பெற்ற
அப்பாகளுக்கு
மட்டும் தான் தெரியும்
முத்தம் காமத்தில்
சேர்ந்ததில்லை என்று
2

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.**அர்னால்ட் அரசு ஜூலியன்**

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்

டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுரூஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884** **paytm 9382172884**

# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த பத்திரகாளியின் வளர்ப்பு சான்றோர் குல நாடார்களே!!!**



ஜூலை 15 என்றாலே நாடார்களுக்குகெல்லாம் உற்சாகம் தான் அன்றுதான் பெருந்தலைவரின் அவதார தினமாகும்.

தமிழ் நாட்டை காமராஜர் ஆண்ட ஆட்சி காலத்திற்கு இணையாக உலக சரித்திரத்தில் யாருமே ஆட்சி நடத்தியது இல்லை. அப்போதெல்லாம் அரசியலை ஒரு சேவையாக சேவையாளர்கள் நடத்தினார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. தமிழகம் மட்டுமல்ல இந்தியாமட்டுமல்ல உலக அரசியலே பார்க்கும் போது மக்களுக்காக தற்போது எந்த தலைவரும் இருப்பதாக தெரியவில்லை. இந்த நிலைமைக்கு முழுமையாக அரசியல்வாதிகளை மட்டும் குறை கூறிவிட முடியாது மக்களின் குண நலமும் மிகவும் மாறிதான் போயிருக்கிறது. மக்கள் வாழ்வில் நல்லொழுக்கம் என்பதே இல்லாமல் போயிற்று குடி, கஞ்சா, காமம், கொலை, திருட்டு வழிபறி இன்னும் பல பஞ்சமாபாதகங்கள் சர்வ சாதாரணமாகிவிட்டது "குடிப்பது நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லதல்ல" என்று கூறி கொண்டே குடிக்கிறார்கள். "குடி குடியை கெடுக்கும்"... என்று பாடி கொண்டே குடிக்கிறார்கள். சொல்லப் போனால் நாட்டில் நடக்கும் பல சமூக விரோத செயல்களுக்கு மூலகாரணமே இந்த குடிதான் என்று பலரும் கூறுகிறார்கள். எனக்கு தெரிந்து தென்னகத்தில் புகழ்பெற்ற உலக அளவில் பேசப்பட்ட ஒரு குடும்பம் ஒரே மகன், அந்த குடும்ப பெண்மணி கூட நம் சமூகத்தில் உயர் பதவி வகித்தவர் ஆவார். அந்த ஒரே மகன் குடித்து குடித்து மானமிழந்து, மரியாதை குறைந்து, அனாதையாக மரணமடைந்தார். இது போன்ற பல சம்பவங்கள் நான் காஷ்மீரில் விமான படையில் பணிபுரிந்த போது லண்டன் நாயர் என்று ஒரு விமானபடை வீரர் அவர் லண்டனில் ராணுவ பயிற்சி பெற்றதால் லண்டன் நாயர் என்று அழைக்கப்பட்டார் அவர் எந்த விமானமும் ரிப்பேர் ஆனாலும் சரி செய்து ஓட வைப்பதில் மிகவும் திறமைசாலி அவரை ராணுவ வீரர்கள் மத்தியில் அனைவருக்கும் தெரியும். 1962ஆம் ஆண்டு சைனா யுத்தத்தில் நன்றாக பணிபுரிந்தவர் ஆனால் குடிப்பழக்கத்தால் தன்னையே இழந்து விட்டார். நாங்கள் குளிரை தாங்குவதற்காக புகாரி என்ற ஒரு உஷ்ண உபகரணத்தை உபயோகப்படுத்துவோம். இந்த லண்டன் நாயர் நன்றாக குடித்துவிட்டு இரவில் புகாரியை சரியான முறையில் வைக்காமல் தூங்கி விட்டார். அந்த இரவில் அந்த உபகரணம் தவறுதலாக வெடித்து அந்த சிறந்த பொறியாளர் லண்டன் நாயரை கரி கட்டையாக்கிவிட்டது. ஆகவே எனதருமை இளைஞர்களே குடிப்பழக்கத்தை தவிர்த்திடுங்கள்! அது உங்கள் முன்னேற்றத்தை பாதியாக்கிவிடும், ஒரு சில இளைஞர்களை கேட்கும் போது அண்ணாச்சி நான் எப்போதாவது தான் குடிப்பேன் என்கிறார்கள்.

அந்த எப்போதாவது குடிதான் எப்போதும் குடியாக மாறிவிடும் உன் மரியாதை, உன் உழைப்பு, உன் ஜாதி பெருமை, உன் சுயகௌரவம் அத்தனையையும் ஊனமாக்கிவிடும். நாடார் சமுதாயமே முதலில் பூரண மது விலக்கை நம்மிடமிருந்து ஆரம்பிப்போம். பூரண மதுவிலக்கில் உறுதியாக இருந்த பெருந்தலைவர் நல்லாட்சியை மலர வைக்க நாம் போராடுவோம் தமிழனே! இளைஞனே!! சுய அடக்கத்தோடு ஒன்றுபட்டு போதை வாழ்க்கையை அகற்றி காமராஜரின் வழி நடப்போம்.!!!

# ஒலிம்பிக் வீரருக்கு பாராட்டு விழா....!




புதுக்கோட்டை சமஸ்தான மன்னர், தி ஹைனஸ் ராஜா ராஜகோபால தொண்டைமான் அவர்களின் மகன் இளவரசன் திரு.பிருத்திவிராஜ் தொண்டைமான் அவர்கள் ஒலிம்பிக் போட்டியில் இந்திய நாட்டின் சார்பில் துப்பாக்கி சுடுதல் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார். இவர் தலைமையில் ஐந்துபேர் கொண்ட துப்பாக்கி சுடும் வீரர்கள் ஒலிம்பிக் செல்லுகிறார்கள். ஆதலால் நேற்று சென்னை, ஹோட்டல்ரெசிடென்சியில் ஒரு பிரம்மாண்ட பாராட்டு விழாவினை, தமிழ்நாடு சூட்டிங் அசோசியேசன் ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சியில், தமிழ்நாடு சூட்டிங் அசோசியேசன் தலைவர் திரு.டி.வி.எஸ்.ராவ் செயலாளர், திரு.எஸ்விஎஸ்.எஸ்.வேல்சங்கர், பொருளாளர். பி.என்.ஆர். என்.வெங்கடேஷ், து.தலைவர்கள், திரு.ரவிகிருஷ்ணன், திரு.ராஜகோபால தொண்டைமான் திரு.கிஷோர் மற்றும் தமிழகத்தின் அனைத்து மாவட்ட ரைப்பில் கிளப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் திரு.பிருத்திவிராஜ் தொண்டைமானுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. கன்னியாகுமரி டிஸ்ட்ரிக்ட் ரைப்பில் கிளப் செயலாளர்.திரு.டேனியல் சந்திரா, ஒருங்கிணைப்பாளர் திரு.ஜே.அர்னால்டு அரசு ஆகியோர், ஒலிம்பிக் வீரரைப்பாராட்டி கௌரவித்தனர்.






திரு.பிருத்திவிராஜ் தொண்டைமான் அனைவருக்கும் நன்றி கூறுகையில், தமிழ்நாடு சூட்டிங் அசோசியேசன் முன்னாள் தலைவர், காலம் சென்ற திரு.பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தான் தனது சொந்த துப்பாக்கியை எனக்கு கொடுத்து, பயிற்சி செய்ய ஊக்குவித்தார். அவர் கொடுத்த அந்த துப்பாக்கியில் பயிற்சி செய்துதான், நான் இன்று ஒலிம்பிக் என்ற உச்சத்தை அடைய முடிந்தது என்று நினைவு கூர்ந்தார்.

வரும் செப்டம்பர் 15ஆம் தேதி இளவரசராகிய இவருக்கும்(Yuvaraja) கர்நாடகா மாநிலம் செந்தூர் சமஸ்தான இளவரசிக்கும்(Yuvarani) புதுக்கோட்டையில் கோலாகலமாக திருமணம் நடைபெற இருக்கிறது வாழ்த்துக்கள்!



GSTIN:33ATNOJ914691ZY ஸ்ரீ முத்துமாலை அம்மன் துணை

போன்:044-45004771, செல்: 8610104055

JAYA SANKAR FANCY STORES



NO: 440. Thiru.Vi.Ka.Nagar,
Sembiam,
Chennai-600 011.



தினத்தந்தி அதிபர் ஐயா பாலசுப்பிரமணிய ஆதித்தன் அவர்களை சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவரும் தமிழ்நாடு பனைமர தொழிலாளர்கள் நல வாரிய தலைவருமான எர்ணாவூர் நாராயணன் அவர்கள் இன்று மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்தார். நிகழ்வில் ஒரு கோடி பனை விதை விதைப்புக்காக குளோபல் அவார்டு பரிசை ஐயா அவர்கள் சமத்துவ தலைவருக்கு அணிவித்து மகிழ்வித்தார்.


M.Rajan

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் (சங்கீதம்:65-1)

Mob:9380198606. 9840167595.



காமராஜர் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

# ஆவடி ராஜ் பர்னிச்சர்
# RAJ FURNITURE

வீடு மனை வாங்க விற்க இங்கு அணுகவும்.

எண்:245, நியூ மில்ட்டரிரோடு, ஆவடி, சென்னை-54, (Kanikapuram Bus Stop).



காமராஜர் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

# நாடார் சமுதாய திருமண தகவல் & சேவை மையம்



பதிவு கட்டணம் இல்லை. புரோக்கர் கமிஷன் கிடையாது.

எடுக்கும் ஜாதகம் 1க்கு 40.00ரூ மட்டும்.

வேலைநேரம்:காலை:10.00 மணி முதல் மாலை:7.00 மணி வரை. ஞாயிறு:காலை:10.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை.

E_mail:Tamilarasan5653@gmail.com web:www.Tamilnadarmatrimony.com

11, ஜாகீர் உசேன் ரோடு, 60 அடிசாலை, (மாடி) கும்பகோணம்



**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!**

**கே.பி.துரைராஜ். செல்:7358736272, 7299136586**



# DURAI VILAS SWEETS

**எங்களிடம் தரமான கடலை மிட்டாய், பொரி வகைகள் தயாரித்து கொடுக்கப்படும்.**

**கிடைக்கும் இடம்: 67/37, சண்முக சுந்தரம் தெரு, முத்தமிழ் நகர், சாலிகிராமம், சென்னை-93.**





N.R.N.Group

போன்:044-26790587

# பிரியா டிப்போ



**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.



# S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A
**Correspondent**
## Koilpillai Mat.Hr.sec.School

**65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.**
**Ph:044-22492489. 22492286, Cell:9840715246.**
**Email:samuelathisayaraj@gmail.com**

**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

## Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com

வாழ்க வளர்க ! உ

**வீடு, மனை** வாங்கவும், விற்பனை செய்யவும் அணுகலாம் **வாங்க !!**

## ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்
**ரியல் எஸ்டேட்**


M.L. சுவாமி

**No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.**
**Cell : 98410 74090** [94443 42707] **RE** - Invesments - **Joint** Ventures

எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை



## அடையார் ஆனந்த விநாயகர்
## காய்கனி & பழங்கள் அங்காடி
(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

## அடையார் முருகன் டிராவல்ஸ்



உரிமையாளர்:
த.பரமசிவன்

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,

**24 மணி நேர சேவை**



**உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813**

# பேபி. புரோட்டீன்ஸ்
## WHOLESALE & RETAIL

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**







இயற்கை ஆர்வலர் மறைந்த டாக்டர்.லால் மோகன் அவர்களின் நினைவு அஞ்சலி கூட்டம்.

நாகர்கோவில் பிஷப் ஹவுஸில் நடைபெற்றது. பைரவிஃபவுண்டேஷன் நிறுவனர் திருமதி.ஷோபா அவர்கள் தலைமையில் பல்வேறு சமூக இயற்கை ஆர்வலர்கள், போராளிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களுக்கு டாக்டர் லால் மோகன் நினைவாக, மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவர் வாழ்ந்த நாகர்கோயில் வாட்டர் டேங்க் ரோட்டிற்கு, டாக்டர் லால்மோகன் சாலை என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில் சுவாமி தோப்பு பால பிரஜாதிபதி அடிகளார், கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பு போராளி.திரு.உதயகுமார், ஓய்வு பெற்ற விஞ்ஞானி ஸ்காட் கல்லூரி முன்னாள் பேராசிரியர் திரு.சோபன்ராய், என்டிஆர் பவுண்டேஷன் தலைவர் திரு.ஜே.அர்னால்டு அரசு, தேசிய பசுமைபடை ஒருங்கிணைப்பாளர் திரு.ஜோபிரகாஷ், விவசாயிகள் சங்கம் புலவர், செல்லப்பா, ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராளி திருமதி.லிட்வின், திரு.தாமஸ் பிரான்கோ, பேராசிரியை சுதாமதி மற்றும் பல்வேறு இயற்கை வளங்களை நேசிக்கும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.


**கல்வி கண் திறந்த காமராஜர் அவர்களுக்கு 122வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!**



S.சக்திவேல் உரிமையாளர். போன்:044-24896190, 9841934490.



**சக்தி ஸ்டோர்** SINCE 1995 High class Provision, Rice , General, Stationary Merchant.

**SAKTHI STORES**

New No:20-A, old No:40-A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai-600 083.



SUGAM
HOSPITALS
Symbol of Health
THIRUVOTTIYUR & CHROMPET
MULTI SPECIALITY HOSPITAL
WORLD CLASS INTENSIVE CARE UNIT
24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
HITECH OPERATION THEATRES
THIRUVOTTIYUR
40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai -19.
CHROMPET
85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai - 44
Dr.D.B.D.Sathiakumar M.D.,
Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M
OUR GROUP DIAGNOSTIC CENTERS
HIBEAM SCANS
TOTAL IMAGING
ROYAPURAM 25 95 17 57
PONNERI 27 97 34 44




ஜூலை – 15 ல்
கல்விக்கடவுள்
கு.காமராஜர்
அவர்களின்
122வது
பிறந்த நாள்
வீர வணக்கம்
R.சிவசந்தானம்
A.தேவேந்திரன்
M.செல்வின்
R.வேல்குமார்
M. முருகேசன்
மாநிலத் துணைத் தலைவர்
நாடார் பேரவை தென் சென்னை மாவட்டம்

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133

## கல்வி

இது மட்டுமா? வீரபாண்டிய கட்டபொம்மன் கட்டிய கோட்டை, கரிகாற் சோழன் கட்டிய கல்லணை, மதுரை திருமலை நாயக்கர் மஹால், மதுரை மீனாட்சியம்மன் கோவில், இராஜராஜ சோழன் கட்டிய இராஜ கோபுரம், செஞ்சிக் கோட்டை, மகாபலிபுர சிற்பங்கள், சேர மன்னன் கட்டிய வட்டக் கோட்டை, இன்னும் எத்தனையோ கட்டிடங்கள் தமிழ்நாட்டில் காலங்காலமாகப் பெயர் சொல்லிக் கொண்டிருக்கும் கட்டிடங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டே, அடுத்த ஹாலுக்குச் சென்றேன். அது மியுசிக் ஹால் என்று எழுதியிருந்தது.

உள்ளே சென்று பார்த்தால், இசைக்கருவிகள் பல இருந்தன. பிடில், யாழ், கிடார், டிரம், ஹார்மோனியம், கஞ்சிரா இன்னும் பல இசைக்கருவிகளைப் பார்த்தேன். நாதஸ்வரத்தைப் பார்க்கக் முடியவில்லை. வீணையைப் பார்க்க முடியவில்லை. அதே மாதிரி பானை, தவில் இவைகளைக் காணோம். உடனே காருக்குறிச்சி அருணாச்சலத்தை நினைத்துப் பார்த்தேன். புல்லாங்குழல் இல்லை, புல்லாங்குழலை ஊதி, ஆநிரைகளை வரவழைத்த கண்ணனையும் நினைத்துப்பார்த்தேன். பாரம்பரிய மிக்க தமிழ் இசைக்கருவிக்கு நிகர் எதுவுமேயில்லை" என்று அவர்களுக்குச் சொல்ல ஆசைப்பட்டேன். ஆனால், நாதஸ்வரம், வீணை இந்தக் கருவிகளுக்கு ஆங்கில வார்த்தை எனக்குத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, இசையை ரசிக்கத் தெரியுமே தவிர, அதனைப் பற்றி எதுவும் தெரியாது. தெரியாத ஒன்றில் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்? என்று அமைதியாக வந்தேன்.

அடுத்து, Gym Hall இருக்கிறது. உள்ளே சென்று பார்த்தேன். அங்கு கூடைப் பந்து வலையும், போஸ்டும் இருந்தது. பந்து, கிரிக்கெட் மட்டை, கேரம் போர்டு மற்றும் செஸ் போர்டு எல்லாம் வைத்திருக்கிறார்கள். பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியை உட்கார்ந்துகொண்டிருந்தார். மாணாக்கர்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். இதற்குப் பக்கத்தில் பெரிய விளையாட்டு மைதானம் இருந்தது.

விளையாட்டு மைதானத்தை ஒட்டி, சிறார்கள் விளையாடும் ஊஞ்சல், சறுக்கு, ஏணி, ராட்டினம், பேலன்ஸ் மற்றும் பல விளையாட்டுப் பொருட்கள் வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நானும், அந்தப் பள்ளி தலைமையாசிரியருடன், விளையாட்டு மைதானத்திற்குள் சென்றோம். எல்லா மாணவர்களும் என்னைக் காட்சிப் பொருளாகப் பார்த்தார்கள். அதில் ஒரு மாணவன் என்னைப் பார்த்து, "நமஸ்தே" என்றான். இன்னும் தமிழ்நாட்டு மாணவர்கள் இருவர் என்னிடம் வந்து, "அண்ணா" என்று பேசினர். இதைக் கேட்டதும், "தேன் வந்து காதில் பாய்ந்தது மாதிரியாக" இருந்தது. இன்னும் ஒரிரு மாணவர்கள் என்னிடத்தில் வந்து, ஏதோ சிரித்துக் கொண்டே பேசினர். ஆனால், எனக்குத்தான் புரியவில்லை. இருப்பினும் அவர்களைப் பார்த்து சிரித்தேன். கையினால் மெதுவாக முதுகில் தட்டினேன்.

இதன்பிறகு, லைப்ரரிக்குக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். இது ஒரு ஆரம்பப் பள்ளிதான். இங்கு சிறு குழந்தைகள் சம்பந்தமான புத்தகங்கள்தான் அதிகம் இருந்தது. நாற்காலி, மேஜை போட்டிருக்கிறார்கள். மாணவர்கள் உட்கார்ந்து, தேவைப்பட்ட புத்தகங்களை எடுத்து படிக்கிறார்கள். பக்கத்தில் நோட்டுப் புத்தகங்களும் வைத்திருக்கிறார்கள்.



எல்லா வகுப்புகளுக்கும், குளிர்சாதன வசதி செய்திருக்கிறார்கள். இது மட்டுமின்றி, பெரிய ஹால் இருக்கிறது. "இது எதற்கு?" என்றேன். "ஆசிரியர் பெற்றோர் கலந்துரையாடல் இங்குதான் நடைபெறும் மற்றும் பெற்றோர்களுக்கான வகுப்புகளும் இங்குதான் நடைபெறும் என்று குறிப்பிட்டார்.

இந்த ஹால் பக்கத்தில் ஒரு சிறு அறை இருந்தது. இது எதற்கு? என்று கேட்டேன். "பெற்றோர்கள் குழந்தைகளுடன் வந்தால், அந்த குழந்தைகளைப் பராமரிக்கும் அறை" என்று பதில் சொன்னார்.

அடுத்து, பூகோள அறையைக் கூட்டிக்கொண்டுபோய் காண்பித்தார். இங்கு தெர்மாமீட்டர், மழைமானி, வெப்பமானி எல்லாம் வைத்திருக்கிறார்கள். மேலும், சுழன்று கொண்டிருக்கிற பெரிய குளோப் வைத்திருக்கிறார்கள்.

எல்லா கண்டங்கள் மற்றும் நாடுகளின் படங்களும் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கண்டமும், அதனுடைய நாடு, தலைநகரம், முக்கிய நகரங்கள், விமானத் தளம், ரயில் நிலையம், துறைமுகங்கள், இங்குள்ள மக்கள், தொழில், ஏற்றுமதிப் பொருட்கள், இறக்குமதிப் பொருட்கள் எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் வரைபடம் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளது. பஸ் நிலையமானாலும் சரி, விமானத் தளமானாலும் சரி, உல்லாசப் பயணம் செல்வதாகயிருந்தாலும் சரி, எல்லோரும் ஒரு வரைபடத்தைக் கையில் எடுத்துச் செல்கின்றனர்.

பூகோளப் பாடத்திற்கு தனியாக ஆய்வுக்கூடம் இருக்கிறது. ஆரம்பப் பள்ளியில் வரைபடத்தைப் பற்றி நல்ல பயிற்சி கொடுக்கிறார்கள். சிறுவன் கையில் ஒரு வரைபடத்தைக் கொடுத்தால், போகவேண்டிய இடத்திற்கு வரைபடத்தின் உதவியால் சென்றுவிடுகிறான். இது சம்பந்தமான பயிற்சியைக் கொடுக்கிறார்கள். இதுமட்டுமின்றி, தெர்மாமீட்டர், மழைமானி ஆகியவற்றைக் கையில் கொடுத்து, அது வேலை செய்தல் மற்றும் அதில் ரீடிங் எடுக்கும் முறை எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள். கிராப் தாளைக் கொடுத்து காற்றழுத்தம் எப்படி வருகிறது என்பதனை விளக்கமாக சொல்லிக் கொடுத்திருந்தார்கள்.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்.பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸிற்காகக் காத்திருந்தால் குறைந்தது இரண்டு, மூன்று பேராவது தினம் வந்து, "திருவான்மியூருக்குப் போகும் பஸ் எது? அண்ணா பொறியியல் கல்லூரிக்கு எந்த பஸ்ஸில் போக வேண்டும்? வண்டலூர் மிருகக் காட்சி சாலைக்குப் போவதற்கு எந்த எண் பஸ்ஸில் போக வேண்டும்? என்று கேட்பார்கள். ஆனால், இங்கு யாரும் கேட்பதில்லை.

தொடரும்............



**நாடார் வரன்கள்: R.C, CSI, இந்து நாடார்களுக்கு அணுகவும், IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,**

# விழித்தெழு!! இளைஞனே!!! விழித்தெழு....

**“கனவு காணுங்கள் - ஆனால்**
**கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல**
**உன்னை தூங்க விடாமல் செய்வதே கனவு!!!**

என்கிறார் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள். இந்த சமூகம் ஏற்றத் தாழ்வுகளால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைய சமூக நிலையைப் பார்க்கின்ற போது நேற்றைய சமூகநிலை சிறந்ததாகத் தெரிகின்றது. நேற்றைய சமூக நிலையைப் பார்க்கின்றபோது அதற்கு முந்தைய நாள் சமூகநிலை சிறந்ததாகத் தெரிகிறது. ஆனால் எல்லா காலங்களிலும் சமுதாயம் பலதரப்பட்ட பிரச்சனைகளையும் சிக்கல்களையும் எதிர்கொண்டுதான் வந்திருக்கின்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சனைகள், அதற்கு ஏற்ப தீர்வும் கண்டிருக்கிறது. இருந்தபோதிலும் காலங்காலமாக தீர்க்க முடியாத பிரச்சனைகளாக சிலவற்றைக் கூறமுடியும். அதில் சாதிய வன்மமும், போதைய பழக்கமும் முதல் இடங்களை வகிக்கின்றன.



காலங்காலமாக சாதிய ஒழிப்பு குறித்த புரிதல்களும் போராட்டங்களும் நடந்திருக்கின்றன. நடந்துகொண்டும் இருக்கின்றன. ஆனால் நாளுக்கு நாள் இந்த சாதிய வன்மம் வளர்ந்துகொண்டே தான் இருக்கின்றது. சாதிய வன்மத்தால் பல உயிரை நாம் காவுகொடுத்துவிட்டோம். அதுவும் இன்று சாதிய வன்மம் என்பது இளைய தலைமுறையினரிடமும் குறிப்பாக பள்ளி மாணவர்களிடமும் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தன் சாதிய அடையாளத்தைக் காட்டுவதற்காக கையில் கயிறு கட்டும் வழக்கம், அதனூடாக சாதிய மோதல்கள் மாணவர்களிடையே இயல்பாகிவிட்ட ஒன்று. மேலும் இந்தச் சாதிய வன்மம் கொலை வரை சென்றுவிட்டது தான் இன்றைய சமூக அவலம்.

எப்படியாவது சாதியை ஒழித்துவிட வேண்டும் என்ற பல தலைவர்கள் இந்த மண்ணில் சாதிய வன்மத்திற்கு எதிராகப் பல சிந்தனைகளை விதைத்த போதும், சாதி இன்னும் அறுடையாகவில்லை. மாறாக துளிர்த்து கிளைவிட்டு வேர்பரப்பி நிற்கின்றது. அண்ணல் அம்பேத்கார், தந்தை பெரியார், காமராசர், கக்கன், இரட்டை மலை சீனிவாசன், அயோத்திதாசப் பண்டிதர் என சாதி ஒழிப்பிற்காகப் பாடுபட்டவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே தான் போகிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று பாடிய கண்ணியன்பூங்குன்றனாரின் மண்ணில் சாதிகள் ஒழிந்தபாடில்லை.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று உயிர்களனைத்தையும் ஒன்றாகப் பாவித்த வள்ளுவன் தொடங்கி இன்றளவும் சாதிய ஒழிப்பு குறித்துப் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். சாதி இரண்டொழிய வேறில்லை” என ஔவையும் புரட்சிக் குரல் எழுப்பினார். அதன் பின்வந்த பாரதியும் “சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்” என சாதிக்கெதிரான புரட்சித்தீ மூட்டினான். அதன்பின் அரசியல் அதிகாரத்திற்கு வந்தவர்கள் திட்டங்கள் தீட்டி சட்டங்கள் வரைந்தனர். ஆனால் சாதிய வன்மம் தொடர்ந்து அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றது.

சாதிய வன்மம் எத்துணை கொடுமையானதோ, அத்துணை கொடுமையானது போதைப் பழக்கம். சமூகத்தில் நடக்கும் தவறுகள் அனைத்திற்கும் ஆணிவேராய் இருப்பது இந்தப் போதைப் பழக்கம் தான். முன்பெல்லாம் மது அருந்துபவர்கள் என்று பட்டியல் இட்டால் ஊருக்கு சிலரை மட்டுமே அடையாளப்படுத்துவார்கள். ஆனால் இன்று மது அருந்தாத சிலரைத் தான் பட்டியல் இடுகிறார்கள். அந்த அளவிற்கு போதைப் பழக்கம் வழக்கமாகிவிட்ட ஒன்றாக இருக்கின்றது. வள்ளுவன் தொடங்கி இன்றளவும் போதைப் பழகத்திற்கு எதிரான செயல்பாடுகளை முன்னெடுத்துதான் வருகிறோம். ஆனால் சாதிய வன்மத்தைப் போல போதைப் பழக்கமும் சமூகத்தில் வேரூன்றி விருட்சமாய் வளர்ந்து விட்ட விச மரம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். போதைப் பொருட்களுக்கெதிரான சட்டங்களும் திட்டங்களும் இருக்கின்றன. ஆனால் அது இந்தச் சமூகத்தைப் புரையோட வைத்துவிட்டது என்று தான் சொல்லவேண்டும்.

பெரும்பாலானோருக்கு போதைப் பழக்கம் என்றால் மது ஒன்று மட்டும் தான் தெரிகிறது. ஆனால் அதைவிட கொடுமையான நச்சுப் போதைப் பொருட்கள் நம் சமூகத்தில் விதைக்கப்பட்டிருப்பதை அறிந்திலர். முன்பு சொன்னதைப் போலவே பல குற்றங்களுக்கும் தவறுகளுக்கும் இந்தப் போதைப் பழக்கம் அடிச்சுவடாக இருக்கின்றது. பாலியல் வன்கொடுமைகள், திருட்டு, கொலை, கொள்ளை என சமூகச் சீர்கேடுகளை அரங்கேற்றுவதற்குத் தூண்டுகோலாக இந்தப் போதை பொருட்கள் இருக்கின்றன.

மருத்துவர், விஞ்ஞானி பொறிஞர், ஆசிரியர், மாவட்ட ஆட்சியர், அரசியல் தலைவர், விளையாட்டு வீரர், தொழிலதிபர், கணிப்பொறியாளர் என்ற கனவுகளோடு பிள்ளைகளைப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்புகிறோம். ஆனால் தவறான நட்பு, சமூகச் சீர்கேடுகள் மீதான நாட்டம் போன்றவை பல பெற்றோர்களின் கனவில் தீயை அள்ளிக்கொட்டுகின்றன. போதைப் பழக்கத்திற்கு ஆளாகி தன்னை தானே அழித்துக்கொள்வதோடு குடும்பத்தையும், தன்னைச் சார்ந்தவர்களையும், சமூகத்தையும் சீரழித்துவிடுகின்றனர்.

சமீபத்தில் கள்ளக்குறிச்சியில் நடந்த சம்பவம் நெஞ்சை உலுக்கிவிட்டது. “நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால் என்ற பாரதியின் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றது. இதுபோன்ற நிகழ்வுகள் பல நிகழ்ந்துள்ளன.

சாதிப் போதையும் மது மயக்கமும் ஒன்றுதான். இவை ஒரு தராசின் இரண்டு தட்டுகளாய் இந்த சமூகத்தில் அரியணை போட்டு ஆட்சிசெய்துகொண்டிருக்கின்றன. நல்ல சமூகத்தைப் படைக்கவேண்டும் என்பதை உணர்ந்த கர்மவீரர் காமராசர் ஊர்கள்தோறும் பள்ளிகளைத் திறந்து படிக்கவைத்தோடு, அனைத்துப் பிள்ளைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்பதற்காக மதிய உணவு திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார். கல்வி நிறுவனங்களில் மாணவச்செல்வங்கள் கல்வியை மட்டும் கற்பதில்லை. வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும், சமுதாய நலன்களையும் கற்றுக்கொள்கிறார்கள். இருந்தபோதும் ஏன் இந்த சீர்கேடுகள் நடக்கின்றன என்ற கேள்விக்கு விடைகாண வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

வணிக மயமாதல், உலகமயமாதல், தாராளமயமாக்கல் என்ற வர்த்தக கொள்கைகளால் மனிதநேயம் அழிந்துவிட்டது. சந்தைப்படுத்துதல் என்ற ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இங்கே அனைத்தும் கிடைக்கும். நல்லது கெட்டது அனைத்தும். இதில் நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பது தான் முக்கியம். சரியான தேர்வைக் கண்டரிய

சரியான வழிகாட்டி தேவையாகிறது. அந்த வழிகாட்டிகளாகப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆட்சியாளர்கள், தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என அனைத்துப் தரப்பினரும் இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் நாம் இப்போது நிற்கிறோம்.

'more-expose-effect' என்று சொல்லுவார்கள். இதற்கான பெருமளவு வாய்ப்பினை திரைப்படங்களும், சமூக ஊடகங்களும் ஏற்படுத்திக்கொடுக்கின்றன. இதற்கு ஒரே தீர்வு மற்றவர்களைக் குறைசொல்வதை விட சுயஒழுக்கத்தை மேற்கொள்வது தான் சிறந்தது. நாள்தோறும் செய்திகளிலும், தொலைக்காட்சிகளிலும், செய்தித்தாள்களிலும், சமூக ஊடகங்களில் வருகின்ற செய்திகள் நெஞ்சைப் பதைபதைக்கவைக்கின்றன. கொலை, கொள்ளை போன்றவற்றை அரங்கேற்றுபவர்களாக இளைய சமூகத்தினரே பெரும்பாலும் இருக்கின்றனர். அதற்கு போதைப் பொருள் பயன்பாடே அவர்களுக்கு அச்செயலைச் செய்வதற்கான துணிச்சலைத் தருகின்றது.

சமூகத்தில் இளைஞர், மாணவர்கள் உலவும் பகுதிகளில் பல்வேறு விதமான போதைப் பொருட்கள் மாத்திரை, சாக்லேட் போன்ற வடிவங்களில் எளிதாக விற்பனை செய்யப்படுகின்றன. இது எங்கிருந்து வருகிறது? யார் விற்பனை செய்கிறார்கள்? இதைப் பயன்படுத்தும் இளைய சமூகத்தினரைத் தட்டிக்கேட்டு நல்வழிப்படுத்தலாம் என்றாலும் கூட நமக்கென்ன என்று அமைதியாகக் கடந்துவிடுகிறோம். ஆனால் சமூகத்தில் மலிந்து கிடக்கும் போதைப்பொருட்களால் நம் பிள்ளைகளும் நாளை சீரழிந்துவிடுவார்கள் என்பதை நாம் ஏன் மறந்து கடந்து செல்கிறோம் என்பதுதான் புரியவில்லை.

சமூகம் என்பதுஒரு கற்பக விருட்சம். அதில் எல்லா உயிர்களும் சமம். ஆனால் இங்கே நடக்கும் சமூகச் சீர்கேடுகள் கற்பக விருட்சத்தை விசமாக்கிக் கொண்டிருக்கின்றன. திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது உண்மைதான். அதற்காக நாம் இதை இப்படியே விட்டுவிட முடியாது. இந்தச் சமூகத்தை மீட்டெடுப்பது ஒவ்வொருவரின் கடமை.

இளைய சமுதாயத்தினர் எதுவொன்றும் எளிமையாகக் கிடைக்கவேண்டும், வாழ்க்கை வாழ்வதற்கேஇருக்கின்ற காலத்தில் அனைத்தையும் அனுபவித்துவிட வேண்டும் என்ற தவறான புரிதல் சமூகத்தில் பரவிக்கிடக்கும் போதைப் பொருட்களிடம் கொண்டுபோய் விட்டுவிடுகிறது.

போதை என்பது தற்காலி மகழிச்சி, குடும்பம் மட்டுமே நிரந்தரம். சாதிய வன்மமும், போதைப் பழக்கமும் இன்றைய சமூகத்தை மட்டுமல்ல எதிர்கால சமூகத்தையும் கெடுக்கும் நச்சுச் செடி அதை அவரோடு களைய வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. சாதிய வன்மமும், போதைப் பழக்கமும் ஒருவனை உழைப்பிலிருந்து வெளியேற்றிவிடுகின்றது. உழைப்பில்லாமல் பணம் சம்பாதிக்க முடியாது. பணம் இல்லாமல் போதைப் பொருள் வாங்கமுடியாது. இந்த நிலையில் போதைக்கு அடிமையான ஒருவன் எந்தநிலைக்கும் சென்று போதைப் பொருளை வாங்கிவிட வேண்டும் என எதையும் செய்யத்துணிகிறான்.

கேளிக்கையில் ஈடுபட்டிருக்கும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதோ, புரட்சிக்குத் தயார் செய்வதோ கடினம் என்று சொல்லுவார்கள். ஆடம்பரமும் கேளிக்கைகளும் மிகவும் ஆபத்தானவை. அதிலிருந்து மீள வேண்டும். ஆடம்பரத்திற்கும் கேளிக்கைகளுக்கும் அடித்தளமாக இருப்பது சாதியமும் போதைப் பொருள்களும் தான். இவற்றிலிருந்து நம் சமூகத்தை பாதுக்காக்க வேண்டும். நாம் இறுதி யுத்தத்திலே இருக்கிறோம்.

அன்றாடம் வரும் செய்திகளைக் காட்சி ஊடகங்களோ செய்தி ஊடகங்களிலோ படித்துவிட்டு, விவாதித்துவிட்டு அடுத்த சுவையான செய்தி வந்தால் இந்தச் செய்தியை விடுத்து கடந்து விடுகிறோம். இந்தச் சீர்கேடுகளால் உயிர்ப்பலி கொடுத்ததும் போதும். பல பெண்கள் விதவையானதும் போதும். இனிமேல் தாமதிக்க முடியாது. பேரழிவின் விளிம்பில் நிற்கின்றோம்.

உடனே விழித்துக்கொள் தோழா!
புதிய வரலாறு படைத்திடவே!
புனிதர் இளைஞர் இங்குண்டு!
உதயமாகும் வரலாற்றில்!
உனக்கும் எனக்கும் பங்குண்டு!!!

என்ற ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் வரிகள் உண்மை. அதன்படி சாதி, மத பேதங்களற்ற, போதைப் பழக்கம் இல்லா சமூகம் என்ற இலக்கை அடைய ஒன்றாகக் கைகோர்ப்போம்! போராடுவோம்! இளைய தலைமுறையை மீட்டெடுப்போம்!

விழித்தெழு இளைஞனே!! விழித்தெழு...!!

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**



ஈக்காட்டுத்தாங்கல் நாடார் சங்க பொருளாளர் இல்ல திருமண நிச்சயதார்த்த விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திய நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள்.



# சித்ரா வாட்ச் கம்பெனி

## CHITHRA WATCH COMPANY

SALES & SERVICE TITAN. SONATA, AJANTA
Expert repairers of world Famous Rolex, Rado, Omega
Seiko, Citizen and other Indian Watches, Til



Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17. Ph:24348524.

விஜிபி

பாரம்பரியம் மிக்க விஜிபி ஹெரிடேஜ் கோல்டன் பீச் ரெசார்ட்டில் உங்கள் இல்லத் திருமண வைபவங்கள், சுப நிகழ்ச்சிகள் பிறந்தநாள் விழாக்கள், கார்ப்பரேட் நிறுவன நிகழ்ச்சிகள் போன்ற அனைத்தையும் எங்கள் கடற்கரை ரெசார்ட்டில் எழில் கொஞ்சும் இயற்கை அழகுடன் கொண்டாடுங்கள்!

VGP HERITAGE
GOLDEN BEACH·ECR

இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து கோடைகாலக் கொண்டாட்டத்தை சலுகையுடன் கொண்டாடுங்கள்! *








VGP Heritage Resort, Injambakam, Chennai | Contact: 75500 34366

உண்மை! உழைப்பு!! உயர்வு!!!

# முப்பெரும் விழா

## பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா
## மாணவ-மாணவியருக்கு பரிசளிப்பு விழா

மற்றும்

## கோடம்பாக்கம் வட்டார நாடார் சங்கம்

# 7-ம் ஆண்டு விழா



நாள் : ஜூலை 21, 2024
ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி

இடம் : ஆலிவ் & ஆர்சர்டு ஏசி ஹால்,
ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

**சமுதாய சொந்தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

| மாம்பலம் | யமஹா | |
|---|---|---|
| **S. ராஜேந்திரன் நாடார்** | **K. சுரேஷ் நாடார்** | **S. செல்வசிங் நாடார்** |
| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |

**நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்**

## கோடம்பாக்கம் வட்டார நாடார் சங்கம்

எண்.11/12, முதல் தளம், ஸ்டேஷன் வியூ ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024. செல் : 88076 53338




GP **கோபால் பிளாஸ்டிக்**


S.இராஜகோபால்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33

**RS பிளாஸ்டிக்**

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.


S.ஜெயராஜ்

நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

**நியூ நிதில் & கோ**

தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..
போன்:044-25962323, 044-42165485





NEW NITHIL & CO




**Whole Sale & Retail**
**Steel & Wood Furniture Show Room**
**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021**



# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.

USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

**MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE**

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது. திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

## Cell : 73388 12126, 73977 76595

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 8.என்தந்தையின் தனி அடையாளங்கள்!

**விஜிபி ராஜாதாஸ்**

உலக வரலாற்றில் உழைத்து முன்னேற்றம் கண்டவர்களுள் என் தந்தை வித்தியாசமானவர். காரணம், அவரது சிந்தனை, செயல்பாடுகள், அவர் கையாளும் புதுமை யுக்திகளேயாகும். அவையே அவரது வெற்றியாக அமையும்.

தன் வியாபாரத்தின் ஆரம்ப நாட்களில் இருந்து உடன் பணியாற்றும் தன் தொழிலாளர்களுடன் ஒரு நல்ல அணுகுமுறையை வைத்து இருந்தார்கள். தான் முதலாளி என்பதையும் தாண்டி அவர்களை ஒரு சகோதரப் பாசத்துடன் நடத்தினார்கள். அதனால் தன்னையும், சித்தப்பா சந்தோசம் அவர்களையும் அண்ணாச்சி என்று அன்புடன் அழைக்கும்படி பணித்திருந்தார்கள். இதனால் தொழிலாளர்களும் ஒரு சகோதர பாசத்துடன் நிறுவன வளர்ச்சிக்காக சிறப்பாக பணி செய்தார்கள்.

"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்" என்பது தத்துவத்தின் சித்திரை, முத்திரை எழுத்தாகும். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற தாரக மந்திரமே மக்கள் மனதில் இன்றும் மாறாமல் நிலைத்து நிற்கிறது.

புதிய சிந்தனை:

தொழில் ரீதியாக என் தந்தையாரின் விளம்பரயுக்தி புதுமை சிந்தனையாகும். விஜிபி விளம்பரம், அதாவது விஜிபியில் இருக்கும் எல்லா திட்டங்களையும் சுவர் விளம்பரம் மூலம் செய்தது, விளம்பரத் துறைக்கே பிதாமகனாக முதலாவதாக செய்தவர் என்ற பெருமைக்குரியவர். சுவர் வண்ண விளம்பரம் என்பது அவரது கண்டுபிடிப்பு என்றே சொல்லலாம். செலவு சிறியதாகவும், அதன் பயன் பெரியதாகவும் இருக்க வேண்டும் என்பது அவரது திட்டமாகும். அந்த திட்டதின் படியே செயலாக்கி வெற்றி பெற்றவர். குறிப்பாக. - சென்னை கடற்கரை இரயில்வே முதல், விழுப்புரம் ரயில் நிலையம் வரை, எல்லா ஸ்டேஷன்களிலும் அதை ஒட்டியுள்ள சுற்றுச் சுவர் பகுதியிலும் விஜிபி விளம்பரம் வண்ண வண்ண எழுத்துக்கள் கண்ணைக் கவரும் வண்ணம் இருக்கும். மேலும் எழும்பூர் இரயில் நிலையத்தில் அமைந்திருந்த மிக உயரமான தண்ணீர் தொட்டியில் விஜிபி விளம்பரம் மக்கள் மனதை பெரிதும் ஈர்த்தது. கிண்டி, கோடம்பாக்கம், சேத்துப்பட்டு மேம்பாலங்களிலும் விஜிபி விளம்பரம் மக்களைக் கண்சிமிட்டி அழைத்தன என்றால் அது மிகையில்லா உண்மையாகும். குறிப்பாக கிண்டி இரயில்வே மேம்பாலம் மிகவும் பிரபலமானது, ஏனென்றால் சென்னை நகரத்திற்கு வரும் மக்கள் மற்றும் வாகனங்கள் அதிகமாக நுழையும் சென்னை நுழைவாயில் கிண்டி மேம்பாலம் ஆகும். அந்த முக்கியமான கிண்டி இரயில்வே மேம்பாலத்தில் விஜிபி கம்பனி விளம்பரம் 40 ஆண்டுகளுக்கு மேல் அலங்கரித்தது என்று கூறலாம். அதுவே ஒரு அடையாள சின்னமாக இருந்து வந்தது ஒரு தனி சிறப்பு, தற்போது அந்த இரயில்வே மேம்பாலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

மர்பி ரேடியோ:

மர்பி ரேடியோ குழந்தையின் படத்தை வைத்து செய்த விளம்பரம். சென்னை சென்ட்ரல் இரயில்வே கட்டிடத்தின் முன் மேற்பகுதியில் மர்பி ரேடியோ குழந்தையின் படம் போட்டு அதன் கீழே வி.ஜி.பன்னீர்தாஸ் அண்ட் கோ என்ற எழுத்துக்கள் இரவில் ஒளிரும் மின் விளக்குகளால் ஒளிவீசும்.

மேலும், முகவரி இல்லா நரிக்குரவர்களுக்கு நம்பிக்கையோடு மர்பி டிரான்சிஸ்டர் ரேடியோவைக் தவணை முறையில் கொடுத்தது, விஜிபியின் பெருமைக்குரிய வரலாறாகும். அதை அவர்கள் தங்கள் இடுப்பிலே கட்டிக் கொண்டு செல்வார்கள். அப்பெட்டியிலிருந்து வரும் பாடல்களை வழியில் போவோர் வருவோர் வியப்பாக பார்ப்பார்கள். அவர்களைப் பொதுமக்கள் விசாரிக்கும்போது, விஜிபி நிறுவனத்தை புகழ்ந்து செல்வார்கள். "ரேடியோ கொடுத்த சாமிகள்" என்று இதைப்பற்றி பொதுமக்கள் இன்றும் பேசிக் கொள்கிறார்கள்.

-தொடரும்..........



இலங்கை, மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 162ஆவது திருவள்ளுவர் சிலையினை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக நல்கை ஆணையர் (Commissioner Grants) பேராசிரியர் சந்தன பி.உடவாட்டி அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக்கழத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வி.கனகசிங்கம், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஆர்.வேல்ராஜ், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் பொறுப்பு இயக்குநர் பேராசிரியர் பஞ்ச் இராமலிங்கம் முன்னாள் இந்தியத் தூதரக அதிகாரி திரு.நடராஜன் ஐயா மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் டி.மங்கலேஷ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

சேர்ந்து பயனடைவீர் ! வாய்ப்பை பயன்படுத்துவீர் !!

## இக்கல்வி ஆண்டிலேயே மருத்துவ படிப்பு பயில மிக குறைந்த இடங்களே உள்ளன.

**Counselling Apply செய்யாத மாணவர்களுக்கும் அரிய வாய்ப்பு**

## அத்தி இயற்கை மருத்துவ கல்லூரி குடியாத்தம் (வேலூர் மாவட்டம்)

(இயற்கை மருத்துவம் & யோகா)

அரசு அங்கீகாரம் பெற்றது. நீட் தேர்வு விலக்கு பெற்றது.

**BNYS (5½ வருடம்) (NATUROPATHY & YOGA)**

**COUNSELLING CODE: 852**

**04171-229108, 8754959066**




வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரின் அருகில் 4கிலோமீட்டர் தொலைவில் காக்கா தோப்பு கிராமத்தில் எங்களுடைய அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவ கல்லூரி அமைந்துள்ளது.

எங்களுடைய கல்லூரியானது இயற்கை சூழலில் தேசிய நெடுஞ்சாலை, இரயில் நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

கிராமப்புற மாணவர்களையும் மருத்துவராக்க வேண்டும் என்ற நோக்கில் பேராசிரியர் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி.சௌந்தரராஜன் அவர்களால் துவங்கப்பட்ட கல்லூரி.

எங்களுடைய கல்லூரியில் இயற்கை சூழலுடன் கூடிய காற்றோட்டமான வகுப்பறைகளும், மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகளும் மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிறந்த முறையில் அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், அத்தி அலோபதி மருத்துவமனை மற்றும் ஆயூஷ் மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவ சிகிச்சை முறையை பயன்படுத்தி நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படா வண்ணம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எங்களுடைய மாணவர்களுக்கு இயற்கை மருத்துவம் மட்டும் இல்லாமல் அலோபதி ஆயுஷ் போன்ற மருத்துவத்தை பற்றியும் அறிய முடிகிறது.. எனவே நோயின் தன்மை அறிந்து அதற்கேற்ப கூட்டு சிகிச்சை முறை பயன்படுத்தி சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க கூடிய வகையில் எங்களுடைய கல்லூரி வளாகத்திலேயே பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய இயற்கை மருத்துவ தினத்தை முன்னிட்டு “உணவே மருந்து” என்ற தலைப்பில் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிக்கு VIT வேந்தர் திரு.ஜி.விஸ்வநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தபோது மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் முறையும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் முறையையும் பார்த்து பாராட்டினார் மேலும் இயற்கை மருத்துவத்தை பற்றி படிக்க வெகு தொலைவிற்கு போக வேண்டிய நிலையை மாற்றி வேலூர் மாவட்டத்திலேயே கிராமபுற மாணவர்களையும் மருத்துவராக்கும் வகையில்அமைந்துள்ள கல்லூரியை மென்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்தினார். மேலும் எங்கள் கல்வி நிறுவனத்தில் மருத்துவ கல்லூரியுடன் மருத்துவம் சார்ந்த அத்தி செவிலியர் கல்லூரி (B.Sc (N).,ANM) மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த குடியாத்தம் பாலிடெக்னிக் கல்லூரியும் அமைந்துள்ளதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.




கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

**போன்:9443742889. 7708701159.**

## சரவணன் ரியல் ஏஜென்சிஸ்

## காமாட்சி ஸ்டோர்ஸ்

**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**



**நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.**



S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

**இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை**

## 35.இது காஸ்ட்லி டயாலிசிஸ்!!

**-டாக்டர் பி.சௌந்தரராஜன்.**

பெரிடோனியல் டயாலிசிஸ் என்றால் என்ன என்று பார்த்தோம். டெக்னிக்கலாக இது எப்படி நடக்கிறது என்று பார்க்கலாமா?



பாடம்-1ல் காட்டியபடி, தொப்புகளுக்கு அருகில் சின்ன ஓட்டை போட்டு கதீடர் என்கிற சிறிய ட்யூபைச் செருகிவிடுவோம். இந்த ட்யூபின் முனை பெரிடோனியல் இடைவெளிக்குள் போய்ச் சேரும், டயாலிசேட் திரவத்தை உள்ளே உலுத்துவதற்கும் பின்னர் மாசு நிறைந்த திரவத்தை வயிற்றிலிருந்து வெளியேற்றுவதகும் பயன்படுவது இந்த ஒரே டியூப்தான். வயிற்றை விட்டு வெளியே வந்த பிறகுதான் இந்த ட்யூப் இரண்டாகப் பிரிகிறது.

படம்-1ல் அ டயாலிசேட் திரவம் உள்ள பை, ஆ அழுக்கு திரவம் சேர வேண்டிய பை அ லிருந்து கதீடருக்கு ஒரு ட்யுப் வருகிறது. இந்த ட்யூபின் வால்திறந்துள்ளது. (இதை வால்வு -சி என்று வைத்துக்கொள்ளலாம்.) கதீடரிலிருந்து ஆ வுக்கு ஒரு ட்யூப் போகிறது. இந்த ட்யூபின் வால் (இது வால்வு - டி) அடைக்கப்பட்டுள்ளது,



இப்போது புவி ஈர்ப்பு விசையால் அளவிலிருந்து வருகிற டயாலிசேட் திரவம் பெரிடோனியல் இடைவெளிக்குள் நிறைகிறது. படம்-2ல் இரண்டு வால்வுகளும் மூடப்பட்டுள்ளன. டயாலிசிஸ் நடக்கிறது. படம் 3ல் வால்வு சி மூடப்பட்டுள்ளது. வால்வு -டி திறந்துள்ளது பெரிடோனியல் இடைவெளியில் இருந்து அசுத்தம் கலந்த திரவம் ஆ பைக்குள் வந்து சேருகிறது. மீண்டும் அடுத்த முறை.. இப்படித் தொடர்கிறது இந்த டயாலிசிஸ்.



இந்த ட்யூப் செருகுவது சின்ன ஆபரேஷன்தான். எட்டு முதல் பத்து நாட்களுக்குள் காயமும் ஆறிவிடும். யாருடைய உதவியும் தேவைப்படாமல் நோயாளியே இந்த டயாலிசிஸைச் செய்துகொள்ள முடியும். ஆனால், அந்த ட்யூப் செருகிய இடத்தை செப்டிக் ஆக விடாமல் சுத்தபத்தமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது முக்கியம்

இது தவிர ஆட்டோமாட்டிக் முறையும் உண்டு. இரவில் எழுந்திருக்கவேண்டிய அவசியம் இல்லாமல் ஹோம் சாய்ஸ் சைக்ளிங் இயந்திரத்தை அடுத்தப் பக்கத்தில் படத்தில் காட்டி இருப்பது மாதிரிப் பொருத்திக்கொண்டு ஹாயாகத் தூங்கிவிடலாம். அந்த இயந்திரமே நேரம் பார்த்து டயாலிசேட் திரவத்தைப் பெரிடோனியல் இடைவெளிக்குள் செலுத்தும். சரியான நேரம் ஆனதும் அங்கிருந்து அசுத்தம் கலந்த திரவத்தை வெளியேற்றும்.

நிரந்தரம், தற்காலிகம் என்கிற இரண்டு வகை சிறுநீரகச் செயல் இழப்பு நோயாளிகளுக்கும் இந்த பெரிடோனியல் டயாலிசிஸ் செய்துகொள்ள முடியும். நிரந்தர சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளுக்கு ஒரு நாளில் நான்கு முறை டயாலிசிஸ் செய்ய வேண்டும். (இதற்கு சி.ஏ.பி.டி. என்று பெயர். முன்பே இதுபற்றி பார்த்தோம்)

ஹீமோ டயாலிசிஸைவிடவும் பிரமாதமானது இந்த சி.ஏ.பி.டி.ஏனெனில், ஹீமோவில் அசுத்தங்களை வடிகட்டுவது செயற்கைச் சவ்வென்பதில் வைட்டமின், புரத இழப்பு அதிகம். இங்கோ வடிகட்டி, இயற்கைச் சவ்வாகவே இருப்பதால் வைட்டமின், புரத இழப்பு மிகவும் குறைவே. டயட் விஷயத்திலும் ஹீமோ டயாலிசிஸ் காரர்களைவிட நிறையப் புரதம் சாப்பிடலாம். தண்ணீர் விஷயத்திலும் அவர்கள் அளவுக்குக் கஞ்சத்தனம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. தவிர, வாரம் மூன்று முறை பல மணி நேரங்களை மருத்துவமனைக்குத் தாரை வார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், இந்த சி.ஏ.பி.டி-யில் எப்போதும் அவர்களுக்கு டயாலிசிஸ் நடந்துகொண்டே இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். நெரிசலில் சிக்கி யாருடைய கையாவது தெரிந்தோ தெரியாமலோ வயிற்றில் பலமாகப் பட்டுவிடாமல் பாதுகாப்பாக இருக்கவேண்டும்.

நம் நாட்டில் இது இன்னும் பரவலாகாததற்குக் காரணம், ஹீமோ டயாலிசிஸை விடவும் இதற்கு இரண்டு மடங்கு செலவு அதிகம் என்பதுதான். காரணம், இந்த டயாலிசிஸ்க்குத் தேவையான டயாலிசேட் திரவமும் ட்யூபும் வெளிநாட்டில் இருந்துதான் இறக்குமதியாகின்றன. இவற்றுக்கு மத்திய அரசும் மாநில அரசும் போட்டி போட்டுக்கொண்டு வரி விதித்திருப்பதால்தான் இவ்வளவு காஸ்ட்லி. பாக்ஸ்டர் என்கிற சர்வதேச நிறுவனம் டெல்லிக்கு அருகில் இந்த டயாலிசேட் திரவத்தை உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை அமைத்திருக்கிறது)

தவிர, இந்த சி.ஏ.பி.டி-க்கான சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இந்தியாவில் மொத்தமே இருபது இருபத்தைந்து பேர்தான் இருக்கிறார்கள்.

கனடாவின் டொரண்டோ வெஸ்டர்ன் மருத்துவமனையில்தான் ஓர்லோ போலஸ் என்கிற கிரேக்க மருத்துவர் இதைக் கண்டுபிடித்தார். பெரிடோனியல் டயாலிசிஸ்க்கான ஒரு வருடப் பயிற்சிக்காக நான் அவரிடம் போயிருந்த போது மிகுந்த ஆர்வத்துடன் கற்றுக்கொடுத்தார். அவருடைய ஒரே ஆசை, உலகம் முழுக்க வாழ்கிற சிறுநீரகச் செயல் இழப்பு நோயாளிகளுக்குத் தன் கண்டுப்பிடிப்பு உபயோகப்பட வேண்டும் என்பதுதான்.

சி.ஏ.பி.டி.அதிகச் செலவு வைக்கிற விஷயம் என்று பார்த்தாம். ஆனால், தற்காலிகச் சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்கு செய்யப்படுகிற ஏ.பி.டிக்கு (Acute Peritoneal Dialysis) குறைந்த செலவே ஆகும்.


நாடார் வரன்கள்: R.C, CSI, இந்து நாடார்களுக்கு அனுகவும், IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,


R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

R.S.SANTHANAM

ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன்.து.அருணாசலபுரம்.

ஜோசப் பிரதாப் சிங் அவர்கள் ஓர் பெருமை மிக்க குடும்பத்தில் பிறந்தவர் அவர்களது குடும்பம் வடக்கன்குளம் உருவான சரித்திரத்தோடு இணைந்த சரித்திரமாகும். ஐநூறு, ஆறுநூறு ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் வடக்கன் குளம் ஒரு ஜனங்கள் நடமாட்டமில்லாத செழிப்பான விவசாய நிலமாகத்தான் இருந்திருக்கிறது. அப்போதெல்லாம் இந்திய ஜனத்தொகையே இந்த அளவுக்கு இல்லாமல் இருந்தது நாம் சுதந்திரம் அடைந்த போது கூட நம் நாட்டு ஜனத்தொகை 40கோடியாகதானே இருந்தது அப்போது பிரிட்டீசார் ஆட்சிகாலத்தில் ஜமீன்தார்கள் நாட்டில் பல பாகங்களிலும் அதிகாரம் செலுத்தி வந்தனர் அவர்கள் தனது அதிகாரத்துக்குள்ள இடங்களை பல பண்ணையார்களுக்கு குத்தகைக்கு விட்டிருப்பார்கள். அப்போதெல்லாம் விவசாயம் தான் முக்கிய தொழில் விவசாயிகளும் தண்ணீர் வசதியுடைய குளம், ஏரி போன்ற இடங்களை சுற்றியே வாழ்ந்தனர் அப்படித்தான் வடக்கன்குளம் வடக்கன் என்ற ஒரு செட்டியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததால் இந்த குளத்திற்கு வடக்கன்குளம் என்றும் நாளாவட்டத்தில் வடக்கன்குளம் என்றும் பெயர் மருவியதாக கூறுவர் ஒரு சிலர் இந்த வடக்கன் கேரளாவைச் சேர்ந்த ஒரு செல்வந்தர் என்றும் கூறுவர் மேலும் இந்த குளமானது வடக்கு பக்கத்தில் சிறிது கூன் வளைவில் காணப்படுவதால் வடக்கூன் குளம் என்றும் அதுவே வடக்கன்குளம் என்றாயிற்று என்றும் கூறுவர் அப்போது அந்த சுற்று வட்டாரத்தில் பெருங்குடி கிராமம் தான் பெரிய கிரமாக இருந்தது ஏனைய இடமெல்லாம் விவசாய நிலமாக இருந்திருக்கிறது. பனை மரமும் தென்னை மரமும் நெல்விளையும் வயல் நிலமாகவும் தான் இருந்திருக்கிறது. அதிகமாக கடற்கரையை சார்ந்தது தான் ஜனங்கள் வசித்து வந்திருக்கின்றனர் அப்படி வசந்த ஊர் உவரி வட்டாரத்தை சார்ந்த அணைக்கரை ஒன்றும் உண்டு. அங்கு கிறிஸ்தவர்கள் அதிகம் வாழ்ந்திருக்கின்றனர். அந்த வட்டாரத்தில் கேரளாவை சார்ந்து கத்தோலிக்க கிறிஸ்தவத்தை சேர்ந்தவர்கள் அதிமாக இருந்தனர். அந்த அணைக்கரையை சார்ந்த சிறிய ஊர்தான் தோப்புவிளை இந்த தோப்புவிளையில் நாடார் சமுதாயத்தினர் வாழ்ந்து வந்தார்கள். பலர் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை தழுவியவர்கள் அங்கிருந்து பனை தொழில் மற்றும் விவசாய தொழில் செய்வதற்காக ஒரு குடும்பம் வடக்கன்குளத்தில் வந்து குடியேறியிருக்கிறார்கள். அவர்களின் பெயர் சாந்தாயி அவர் கணவர் பெயர் ஞானமுத்து நாடார் இவர்களை தொடர்ந்து பல குடும்பங்களும் வடக்கன்குளத்தில் குடியேறியிருக்கிறார்கள் உதாரணமாக பளையங்கோட்டையார், மணக்காட்டார், செம்பாட்டார் இது போன்ற இன்னும் பல குடும்பங்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள். மேலும் பிற்காலத்தில் சாந்தாயி குடும்பத்தில் பெண் கொடுத்தவர்களும் பெண் எடுத்தவர்களும் வடக்கன்குளத்தை பூர்வீகமாக கொண்டுள்ளனர். அவர்களும் மண்ணின் மைந்தர்களே ஆனாலும் எல்லோரையும் வழி நடத்தியது சாந்தாயி ஞானமுத்து தம்பதியினர்கள் தான். அந்த தம்பதியினருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகளும் பிறந்தனர். பெண் பிள்ளைகளை நல்ல குடும்ப ஆண்களுக்கும் மணம் முடித்து வடக்கன்குளத்திலேயே வாழ்ந்திருக்கின்றனர். அவர்களும் சாந்தாயி ஞானமுத்து குடும்பத்தாரோடுதான் சேர்ந்து வாழ்ந்தனர். இவர்களுடைய ஆண் வாரிசான மூவர்களும் ஒற்றுமையாக உழைத்து அந்த குடும்பத்தை மிகவும் செல்வ செழிப்பில் உயர்த்தி வந்தனர். அந்த காலத்தில் பல ஜாதிகள் இருந்தாலும், மரியாதையாக அந்த ஜாதியின் பெயரை கூறியே அழைப்பார்கள் ஐய்யராக இருந்தால் ஐயரே என்றும் நாயுடுவை, நாயுடு என்றும் , உடையாரை, உடையாரே என்றும் தேவரை தேவரே என்றும் அழைப்பார்கள் அதுபோலவே நாடார்களை நாடாரே என்றும் அழைப்பது சகஜமான ஒரு செயல் அந்த வகையில் சாந்தாயி ஞானமுத்து மகன்கள் மூவரையும் நாடாரே என்று அழைத்தார்கள் மேலும் அடையாளம் தெரிவதற்காக மூத்த மகனை மூத்த நாடார் என்றும் நடுமகனை நடுநாடார், என்றும் இளையமகனை இளைய நாடார் என்றும் அழைத்தார்கள். மூத்த மகனின் பெயர் மலையப்பன் என்று தெரிகிறது. ஆகவே மூத்த நாடார் குடும்பத்தாரை மலை குடும்பத்தார் என்று இன்றும் வடக்கன்குளத்தில் அழைத்து வருகிறார்கள். அந்த குடும்பத்திலிருந்து உதயமானவர்கள்தான் கிராமணியார் குடும்பம் அந்த குடும்ப வழி வந்தவர்தான் பிரதாப்சிங் ஆவார்.- தொடரும்....


M.S.சேகர் நாடார் & சன்ஸ்

ஸ்ரீ குற்றால மாடசாமி துணை
ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை

செல்:98944 83509
97896 86474
94435 74102.

**ஸ்ரீ ராஜ்குமார்**

**பாத்திர மாளிகை & பர்னிச்சர்ஸ்**

**GST No:33AAZFR4404Q1ZG**

மயிலாடுதுறை ரோடு, வைத்தீஸ்வரன்கோயில் - 609 117.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**58.முதல் மரியாதை....**



திட்டமிட்டபடி ஜராசந்தனை கொன்றுவிட்ட பிறகு கிருஷ்ணனும் பீமனும் அர்ச்சுனனும்... வெற்றிகரமாக நாடு திரும்பினார்கள்..

அவர்கள் வந்ததுமே.. ஒரு யாகத்தை செய்தார்கள். அசுவமேத யாகம்... குதிரையை வைத்து நடத்தப்படும் ஒரு யாகம் அது..

யாகம் முடிந்ததுமே... ஒரு பெரும் படையுடன் புறப்பட்டு சென்றான் அர்ச்சுனன்... திக்கு விஜயம் செய்ய ... அதாவது... எந்த நாட்டுக்குள் அவன் நுழைகிறானோ.. அந்த நாட்டின் மன்னன் உடனடியாக அவன் எதிரே வந்து நிற்க வேண்டும்..

தனது மணி முடியை இறக்க வேண்டும்... யாக குதிரையின் காலடியில் வைக்க வேண்டும்.. குதிரையை வணங்கவேண்டும்..

அப்படி செய்துவிட்டால்... அவன் நாட்டை அவன்தொடர்ந்து ஆளலாம்.

ஆனாலும் கப்பம் கட்ட வேண்டும்.. இந்திரபிரஸ்தத்துக்கு.. அதனுடைய கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு ஆட்சி செய்ய வேண்டும்.

அந்த நிபந்தனைகளுக்கு அவன் கட்டுப்பட மறுத்தாலோ..

உடனே அர்ச்சுனன் போர் தொடுப்பான்.. நாட்டை பறிப்பான். அந்த மன்னனை அடிமைப்படுத்தி விடுவான்.

இப்படிப்பட்ட நிபந்தனைகளோடு சென்ற அர்ச்சுனனுக்கு... சென்ற இடத்திலெல்லாம் சிறப்பான வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

கப்பமும்.. காணிக்கைகளும்.. பரிசுப் பொருட்களும் வாரி வாரி வழங்கப்பட்டன.

இப்படியே உலகம் சுற்றிய அர்ச்சுனன். சில காலம் கழித்து... பெரும் வெற்றிகளோடு நாடும் திரும்பினான்.

அவனது அந்த வருகைக்குப் பிறகு.. இந்திரபிரஸ்தத்தின் கஜானா நிரம்பி வழிந்தது... செல்வம் நிறைந்த நாடு என்ற அந்தஸ்தையும் அது பெற்றது..

எனவே... உடனடியாக ராஜசூய யாகம் ஒன்றை நடத்த பாண்டவர்கள் விரும்பினார்கள்... யுதிஷ்டிரனை ராஜ ராஜன் என்று பிரகடனப்படுத்தவும் ஆசைப்பட்டார்கள்...

அதற்கான சூழ்நிலைகளை ஏற்கனவே அவர்கள் உருவாக்கி விட்டார்கள்.

மகா வல்லவன் என்று புகழப்பட்ட ஜராசந்தனே கொல்லப்பட்டு விட்டானே... அதுபோதாதா... அது மட்டுமல்ல..

அவன் சிறையில் அடைத்து வைத்திருந்த... ஏராளமான மன்னர்களையும் அவர்கள் இப்போது விடுதலை செய்துவிட்டார்கள்... எனவே..



அந்த மன்னர்களும் இப்போது இந்திர பிரஸ்தத்தை வணங்கினார்கள்... அதற்கு கப்பம் கட்டவும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்..

இவையெல்லாம் போக அர்ச்சுனன் பெற்று வந்த வெற்றிகள் வேறு..

அவர்களும் கூட யுதிஷ்டிரனை பேரரசனாக ஏற்றுக் கொள்ள சம்மதித்துவிட்டனர்.. ஆகவே..

ராஜசூய யாகத்தை நடத்த உங்களுக்கு எந்த தடையுமே இல்லை என்றான் கிருஷ்ணன்..

உடனே நல்லதொரு நாள் குறிக்கப்பட்டது... கேட்டை நட்சத்திரமும்... மூல நட்சத்திரமும் கூடிய ஒரு அமாவாசை தினத்தில் ... யாகம் நடந்தது..

யாகத்துக்கு பீஷ்மர் வந்திருந்தார்.. திருதராஷ்டிரனும் விதுரனும் வந்திருந்தார்கள்...

துரியோதனன் வந்திருந்தான்.. கூடவே கர்ணனும் சகுனியும் வந்திருந்தார்கள்.

ஆச்சாரியார்கள் வரிசையில் துரோணரும்... கிருபரும்.. அசுவத்தாமனும் வந்திருந்தார்கள்...

கிருஷ்ணன் அவர்களோடேயே இருந்தான்... சிசுபாலனும் வந்திருந்தான்.

யாகம் நடந்து முடிந்ததுமே.... முதல் மரியாதை யாருக்கு என்ற எதிர்ப்பார்ப்பு மன்னர்களிடையே எழுந்தது.. ஆனால்... யுதிஷ்டிரனோ.. கொஞ்சம்கூட குழப்பம் அடையவில்லை... கிருஷ்ணனுக்கே அதை அர்ப்பணித்தான்..

அது அங்கிருந்த மன்னர்கள் பலருக்கு பிடிககவில்லை. தகுதி நிறைந்த பலரை யுதிஷ்டிரன் அலட்சியப்படுத்திவிட்டதாக அவர்கள் நினைத்தார்கள்.

பீஷ்மர் அங்கேதான் இருந்தார். குலத்தில் அவர் பெரியவர்... திருதராஷ்டிரனும் அங்கேதான் இருந்தான். அவர்தான் இந்திர பிரஷ்த்தை யுதிஷ்டிரனுக்கு வழங்கியவர்..

துரோணரும் கிருபரும் கூட அங்கேதான் இருந்தார்கள்.. பாண்டிவர்களுக்கு அவர்கள் யுத்தக்கலையை பயிற்றுவித்தவர்கள்..

இவர்களைத் தவிர வேத வியாசரும்.. நாரதரும்கூட அங்கேதான் இருந்தார்கள்... நீதி தவறாத விதுரனும் அங்கே தான் இருந்தான்..

ஆக.. இத்தனை தகுதியுள்ள பலபேர் அங்கே இருந்தும் கூட...

ஒரு மன்னன் என்ற அந்தஸ்து கூட இல்லாத கிருஷ்ணனுக்கு... அவன் முதல் மரியாதையை தந்தது... நிறைய பேருக்கு பிடிக்கவில்லை..

சிசுபாலனோ.. அதை வார்த்தைகளாக கொட்டி தீர்த்தான்.

ஏய் யுதிஷ்டிரா... ஒரு மாட்டு இடையனை தேடி பிடித்து மரியாதை செய்திருக்கிறாயே... நீயெல்லாம் ஒரு மன்னனா என்றான் அவன். - தொடரும்.......




V.L.வெள்ளையா நாடார்

ரியல் எஸ்டேட்



V.Shankarlingam

V.L.Vellaya Nadar

V. SHANKARLINGAM MOBILES

Available All Cell Phone & Accessories etc...

No:6, Vijayaragavapuram, P.V.Rajamannar Salai, Chennai-93

Cell:9384728151. 9841511234, 9786111234, 044-43540234



V. Mohanraj

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



29. உட்கார்ந்த சாவித்திரி அவரை நேருக்கு நேராய் ஏறிட்டாள்.

"என்ன சார் விசயம்?"

உங்கள் வேலை விசயம்தான்..."

"அதுதான் முடிந்துவிட்டதே..."

"ஒன்று முடிந்தால் ஒன்று தொடங்குமல்லவா?"

"என்ன சார் புதிர்...?"

"இது என்ன மாதம்?"

"ஜூன்"

"ஜூன் மாதம்தானே பள்ளிக் கூடங்கள் திறக்கும்...?

"..................

"நான் முன்பே சொன்னேனே டீச்சரம்மா.... அதற்குள் மறந்து விட்டீர்களா? இந்தாருங்கள் உங்கள் அப்பாயின்மென்ட் ஆர்டர்! இனி நீங்கள் எந்த ஒரு கம்பெனிக்கும், எந்த ஒரு முதலாளிக்கும் கைகட்டி நிற்க வேண்டாம்! உங்கள் ராஜ்யம் இனிமையானது. இனிமையாக அமையட்டும்! ஆல்தபெஸ்ட்!" உறையில் போட்ட உத்தரவைத் தந்தார்.

ஒரு கணம் உலகமே சுழல்வது போலிருந்தது சாவித்திரிக்கு!

கரங்கள் நடுங்க எழுந்து நின்று அவர் தந்த உத்தரவை வாங்கினாள். பரபரப்புடன் பிரித்துப் படித்தாள்.

சென்னையிலுள்ள ஒரு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியையாய் சேர்ந்து கொள்ளச் சொன்னது அந்த உத்தரவு. உத்தரவை மடித்து உறையினுள் போட்டாள். குனிந்த தலை நிமிர முடியாமல் நின்றாள்.

"திருப்திதானே மிஸஸ் சாவித்திரி?"

தோள்பட்டைகள் குலுங்கின. அழுதாள்...வெளிப்படையாக அழுதாள். "அழுகிறீர்களா?

"ஆமாம் சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஏன்?

"எனக்கு நீங்கள் இவ்வளவு பெரிய நன்மைகள் செய்வீர்கள் என நான் எதிர்பார்க்கவில்லை.."

"அதற்காகவா அழுகிறீர்கள்?

"ஆமாம். இனம் கண்டு கொள்ள முடியாமல் போகிறதே மனங்களை, அதற்காகத்தான்! என் வாழ்க்கையில் ஒருவன் நெருப்பு வைத்தான். எனக்கென ஒரு வேலை தந்த உங்களிடமிருந்து வேலை வேண்டாம் என என்றதும் என் தகுதிக்கேற்ற வேலை வாங்கித் தருவதாய் அவகாசம் கேட்டு.. அதை நான் மறந்தே போனபோது மறக்காமல் ஏற்பாடு செய்த உங்களுக்கு நான் நன்றிக் கடன்பட்டுவிட்டேனே... அதை நினைத்து அழுகிறேன்...

மிஸஸ் சாவித்திரி... எம்.டியின் குரலில் வித்தியாசமிருந்தது. அந்த வித்தியாசத்தில் தலை நிமிர்ந்தாள்.

"என்ன?

"இனி நீங்கள் அழக்கூடாது! உங்கள் பயணம் அழுகின்ற பயணம் இல்லை! அழுகையை உதறி பெரிய சவாலை ஏற்றுக் கரை ஏறும் பயணம்! போய் வாருங்கள்! உங்கள் ஆசிரியைத் தொழில் சிறப்பாக அமையட்டும்!" விடை கொடுத்தவர் தன் இருக்கையிலமர்ந்தார். மேஜைக்கடியில் பஸ்ஸரை அழுத்தினார்.

பியூன் வந்தான்.

"அம்மாவைக் கொண்டு வீடு வரைவிட்டுவிட்டு வர ஒரு டாக்சி ஏற்பாடு பண்ணு. நீயே கூடப்போய் விட்டுவிட்டு வா. மிஸஸ் சாவித்திரி... நீங்கள் போகலாம்.." வேலைகளில் மூழ்கினார் எம்.டி.அவரை நோக்கி கரம் குவித்துவிட்டு வெளியேறினாள் சாவித்திரி.

டாக்ஸியில் போகும் பொழுதெல்லாம் எம்.டியின் பெருந்தன்மைகள் நெஞ்சில் நீக்கமற நின்று நிழலாடின.

எவ்வளவு பெரிய மனிதர் இவர்...?

இவருக்குள் இத்தனை சொல்லொழுக்கங்கள்... பலன் கருதாத உபகாரம்...! எப்படி, எப்படி? ரகுவரன் நடமாடும் பூமியில் இப்படிக் கூட ஒரு நல்ல மனிதரா...?

வீட்டில் தான் தினம் தினம் வணங்கும் சுவாமி படத்தின் நினைவு வந்தது. சுவாமி தன்னைப் போராட்டங்களின் மத்தியில் அழுந்திப் போகாமல்... இதமாய் கடலின் அலைக்கரங்கள் கட்டுமரங்களையும், விசைப்படகுகளையும், கனமான கப்பல் மரங்களையும் கூட எளிதாகத் தூக்கி, ஏந்தி ஏந்தி விட்டுப் பிரயாணிக்கச் செய்வது போல தன்னையும் சுவாமி தான் ஏந்திக் கொண்டு போகிறார்.

சுவாமி வடிவில் மனிதன். அந்த மனிதரே... எம்.டி.என்ற உறுதி அவளுக்குள் எழுந்தபோது பெண்மையின் மென்மை விளங்கும் கண்ணீர் வர்ஷித்துக் கரகரவென வழிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். டாக்சி அண்ணா சாலையில் பூம்புகாருக்கு எதிரே வந்தபோது நிறுத்தச் சொல்லி இறங்கினாள். தன் முதல் சம்பளத்தின் முதல் செலவாக ஒரு சந்தன மாலை வாங்கிக் கொண்டு காரில் ஏறினால் பள்ளியில் போய், தலைமை ஆசிரியரிடம் வேலைக்கான உத்தரவைக் கொடுத்தாள். ஆசிரியர் பள்ளி பதிவேட்டில் அவளின் பெயர் நல்ல நேரம் பார்த்து எழுதப்பட்டது. எழுதிவிட்டு நிமிர்ந்து அவளை, தலைமை ஆசிரியர் அழைத்துப் போய் வகுப்பறையில் விட்டு அறிமுகம் செய்தார்.

"உங்கள் தொழில் திறமையும், உழைப்பும், ஆர்வமும் இந்தப் பள்ளிக்கும் உதவியாயிருக்கும் என நம்புகிறேன்..." என்று வாழ்த்திவிட்டு அகன்றார்.ரிடையர் ஆகப்போகும் மாதங்களை எண்ணிக் கொண்டிருக்கும் அந்தத் தலைமை ஆசிரியர் மனதில் சுவாமியையும், எம்.டியையும் நினைத்துக் கொண்டாள்.

பள்ளி முடிந்து பஸ் பிடித்து வீட்டிற்குப் போகும்போது அந்த ரகுவரனின் நினைவு வந்தது.

"அடேய்... அற்பப் பதரே..! நீயாடா என்னை வென்றாய்...? நீயாடா என்னை வெல்வது...? நான் நெருப்பு! நெருப்பைத் தொட்ட நீ கருகிப் போவது மட்டும் நிஜம்!" மனதிற்குள் வக்கிரமாய் அவனைக் காலில் போட்டு உதைத்தாள்.

வீட்டிற்குள் வரும்போது அனிதா ஆவலுடன் வரவேற்றாள்.

"அனிதா..." மனமும் முகமும் மகிழ அனிதாவின் கையைப் பற்றியபடி உள்ளே சென்றாள் அனிதா.

அக்கா...!

"என்ன அனிதா?"

"நான் ஊருக்கு போகட்டுமா?"

"திக்"கென்றாகிவிட்டது. சாவித்திரிக்கு! அவளை அதிர்ச்சியுடன் கண்கள் அகலப் பார்த்தாள் சாவித்திரி.

"என்ன கேட்டாய்... என்ன கேட்டாய்?"

நான் ஊருக்குப் போகட்டுமா?"

"ஏன்?

"ஏனோ? போகலாம் போல் தோன்றுகிறது..."

சரிபோ" சொல்லிவிட்ட மௌனமாகிப் போனாள் சாவித்திரி.

காபி கலந்து கொண்டு வந்தாள் அனிதா. டீப்பாயில் வைக்கச் சொல்லிவிட்டுக் குளியலறைக்குப் போய் கை, கால், முகம் கழுவினாள். முகத்தைப் பூத்தவாலையில் அழுந்தத் துடைத்தபடி ஹாலுக்குள் வந்தாள்.

காபி எடுத்துப் பருகினாள்.

அனிதா..."

"என்ன அக்கா?"

"நீ என்னை அக்கா என்று அழைக்கச் சொன்னதால் ஏதாவது அந்நியமாய் நினைக்கத் தோன்றுகிறதா?"

"முன்பு அப்படித் தோன்றவில்லை..."

இப்போது...?"

"அண்ணி என்று வாய் நிறைய அழைத்த காலங்கள் நெஞ்சில் வந்து நின்று உறுத்துகின்றன."

"உன் அண்ணன் நினைவு...?"

"சத்தியமாய் இல்லை! எனக்குக் கல்யாணமாகி அவனைப்போல் ஒருவன் கணவனாய் வந்திருந்தால் விஷம் வைத்துக் கொன்றிருப்பேன்!"

# நாலுமாவடி ⇨ சென்னை -MJF.Ln.M.இராமச்சந்திரன்

எனது சொந்தஊர் தூத்துக்குடி மாவட்டம் நாலுமாவடி கிராமம். நான் 1948செப்டம்பர் 19அன்று பிறந்தேன். 1975 ஜனவரி 29அன்று எனக்கும் முத்துக்கனிக்கும் திருமணம் நடந்தது. நான் 1962 பிப்ரவரியில் சென்னைக்கு வந்தேன்.

1966ல் மயிலாப்பூரில் எனது அண்ணன் எம்.சேர்மப்பட்டு நாடாருடனும், எனது தம்பி எம்.தங்கராஜாவுடனும் மளிகை கடை தொடங்கினோம். எங்கள் தந்தை சிலம்பக்கலை அரசர், கோ.மனுவேல் நாடார், எங்கள் தாய் சண்முகவேல் நாடாச்சி ஆகியோரின் நிறைவான ஆசீயுடனும், எங்களின் தளராத உழைப்பினாலும் விரைவான வளர்ச்சி சாத்தியமானது.

1972ல் மந்தவெளியில் ஸ்ரீ முருகன் ஸ்டோர் என்ற மளிகை கடை தொடங்கினோம். இந்த காலக்கட்டத்தில் தான் பெருந்தலைவர் திரு.கு.காமராஜரின் சந்திப்பும், தொடர்ந்து அவரோடு பயணிப்பது, அவரால் அடையாளம் காட்டப்பட்ட இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், திண்டிவனம் கே.இராமமூர்த்தி, குடந்தை இராமலிங்கம், நாத்திகம் இராமசாமி போன்ற பல தலைவர்களுடன் பயணிக்கும் பேரு கிடைத்தது.

இதனிடையே மயிலை வியாபாரிகள் சங்கத் தலைவர் அண்ணாச்சி திரு.சித்தர் ஜான், புனித ஜான்ஸ் பள்ளி திரு.இராஜ்குமார், தமிழ்நாடு வர்த்தகர் கழக செயலாளர் அண்ணாச்சி திரு.காசிச்சாமி போன்ற பலரது நட்பும் கிடைத்தது. அப்போது வர்த்தக கழக தலைவர் திரு.காளிதாஸ் சேட் தலைமையில் முத்தமிழ் காவலர் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம் முன்னிலையில் நடைபெற்ற வர்த்தகர் கழக பொதுக்குழு ஆண்டுவிழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

நெல்லை நாடார் சங்கத் தலைவர் அண்ணாச்சி திரு.எஸ்.இராமச்சந்திரன் நாடார் தலைமையில் சங்கத்திலும் பள்ளியிலும் பணியாற்றும் பெயரும் கிடைத்தது. நாடார் மகாஜன சங்கச் செயலாளர் அண்ணாச்சி திரு.கங்காராம் துரைராஜ் நட்பும் கிடைத்தது. தொடர்ச்சியாக பல ஊர்களில் சமுதாய பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

1978ல் அடையாற்றில் ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் மொத்த மளிகை விற்பனை கடை தொடங்கினோம். இதனால் அடையாற்றில் இருந்து மாமல்லபுரம், புதுப்பட்டணம் வரை நல்ல தொடர்பு ஏற்பட்டது. மந்தவெளி நண்பர் திரு.தனபாலனுடனும் வணிகர் சங்க நடவடிக்கைகள் தொடர்ந்தது. இந்த காலக்கட்டத்தில் சென்னை மாநகர ஆணையராக இருந்த W.I.தேவாரம் IPS., அவர்களின் அறிமுகமும் உதவியும் கிடைத்தது. அதே போல நாடார் முரசு துவக்க காலத்தில் மரியாதைக்குரிய திரு.ஜூலியன் நாடார் நட்பும் கிடைத்தது.

1984ல் அடையாறு, திருவான்மியூர், பெசன்ட் நகர், தரமணி , கோட்டூர் அடங்கிய அடையாறு வியாபாரிகள் சங்கம் தொடங்கினோம். 1986ல் அடையாறு நாடார் சங்கம் தொடங்கினோம், இதன் மூலமாக சிறந்த சமுதாய பணிகளை செய்ய முடிகிறது. குஜராத் பூகம்பநிதியாக முதல்வர் கலைஞரிடம் ஒரு லட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபாய் வழங்கினோம். பெசன்ட் நகர் மயானப் பணிக்காக அடையார் ஆனந்தபவன் திரு.K.T.சீனிவாச ராஜா, திரு.K.T.வெங்கடேஸ் ராஜா மூலமாக ரூபாய் இரண்டரை லட்சம் அளவில் செலவிட்டோம். ஈஷா அமைப்பின் சார்பாக பெசன்ட் நகர் மயானம் புதிய வடிவம் ஏற்படுத்தப்பட்டபோது ரூபாய் இரண்டு லட்சம் நிதியாக கொடுத்து உதவினோம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் முன்னாள் கேரள ஆளுநர் திரு.பி.இராமச்சந்திரன், வாழப்பாடி திரு.கே.இராமமூர்த்தி, திரு.ஜி.கே.மூப்பனார், திரு.ஜி.கே.வாசன், த.மா.கா., ஆகியோர் தலைமையில் கட்சி பொறுப்புகளில் ஈடுபாடுடன் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. இதனால் அதிகமான அரசியல் தலைவர்களின் நட்பும் கிடைத்துள்ளது. அரசியல் அறிவியல் பாடத்திட்டத்தில் எம்.ஏ படித்துள்ளேன்.

தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி மீட்பு பணியின் போது சின்னையா திரு.சிவந்தி ஆதித்தன் மற்றும் தளபதி, எர்ணாவூர் ஏ.நாராயணன், என்.ஆர்.தனபாலன், டி.என்.யு.நாகராஜன் போன்ற பலரின் நட்பும் கிடைத்தது. தொடர்ந்து ஐயா. பா.இராமச்சந்திர ஆதித்தன், மெர்கண்டைல் வங்கியை மீட்கும் பணியில் ஈடுபட்டபோது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அடையாற்றில் இருந்து மாமல்லபுரம் வரையிலும் உள்ள சமுதாய மக்களிடமிருந்து பங்கு திரட்டிய வகையில் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் திரட்டி கொடுத்தோம், அதற்காக திரு.இராமச்சந்திர ஆதித்தன் அவர்கள், விருந்து கொடுத்து பாராட்டினார்கள். மெர்கண்டைல் வங்கிக்காக நடைபெற்ற மாபெரும் எழுச்சி ஊர்வலத்தில் எங்கள் பங்கு மகத்தானது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

தொடர்ந்து அடையாறு நாடார் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்புடன், ஒவ்வொரு மாதமும் செயற்குழு கூட்டமும், ஒவ்வொரு ஆண்டும் பொதுக்குழு - ஆண்டுவிழாவும் சிறப்பாக நடத்தி வருகிறோம். எங்களின் தாரக மந்திரம்:-

அடிபட்டேன் என்று வராதே!!

அடித்தேன் என்று வா.!!!

பெருந்தலைவரின் 122ம் ஆண்டு பிறந்த நாளில், அவரின் புகழை பாடுவோம். இவண். MJF.Ln.M.இராமச்சந்திரன் தலைவர் அடையாறு நாடார் சங்கம்.



International conference arts and culture of tamils (ICACT) - 2024 Prof.Chandan P.Udawatte, Vice Chairman, University Grants Commission, Sri Lanka.Prof.V.Kanagasingam, Vice Chancellor, Eastern University, Sri Lanka, ‘Dr.R.Velraj, Vice Chancellor, Anna University, Chennai, Prof.Panch.Ramalingam, Director (i/c). UGC- MMTTC, Pondicherry University, Shri.A.Natarajan, Former Consul General of India, Prof.T.Mangaleswaran, Vice Chancellor, University of Vavuniya, Sri Lanka and many others graced the function by their august presence.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**88.முறையான பேச்சுக்கு மூன்று வழிகள்!**



பொருளற்றப் பயனில்லாத வெட்டிப் பேச்சு நன்மை தராது. ஆனால் கேடு விளைவிக்கும். நல்ல பயனுள்ள பணிகள் செய்யும் நேரத்தை வீணடித்துவிடும்.

வீண்பேச்சு வேலைக்கு இடைஞ்சல் தானே!!

இப்படித்தான் கிரேக்கத் தத்துவஞானி சாக்ரடீஸிடம் அவரது நண்பர் ஒருவர். "உங்களுக்கு விஷயம் தெரியுமா? அந்த" என்று சொல்வதற்கு முன்பாக, அவரைத் தடுத்து நிறுத்தி" நீ சொல்லப் போகும் விஷயத்தை மூன்று முறை அலசிப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"மூன்று முறை அலசிப்பார்க்கவா? எப்படி?" என்று குழப்பமாகக் கேட்டார் நண்பர். சாக்ரடீஸ் உடனே "முதல் அலசல், நீ சொல்வது உண்மையான செய்தியா? பிறர் சொன்னதைக் காதில் வாங்கிச் சொல்கிறாயா? என்று பார்க்க வேண்டும். இரண்டாவது நீ என்னிடம் சொல்லும் விஷயம் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தருமா? வேதனை தருமா? என்று அலசிப்பார். அதிலும் தேறினால், அது நல்ல செய்தியா? கெட்ட செய்தியா? என்று மூன்றாவதாக அலசிப்பார்த்துவிட்டு மூன்றிலும் தேறி விட்டால் நேரடியாக அறிந்து பிறருக்கு அது நன்மை தரும். நல்ல செய்தியாக இருந்தால் மட்டும் சொல். அப்படி இல்லாத விஷயமாக இருந்தால் எதுவும் சொல்லாதே. விட்டுவிடு. பயனுள்ள விஷயத்தை மட்டும் பேசவேண்டும் காலத்தை வீணாக்காதே, மூளைக்கு வேலைகொடு, சிந்தித்துச் செயல்படு" என்று கூறியுள்ளார். இதைத்தான் திருவள்ளூவர்

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனில்லாச் சொல் -என்று கூறியுள்ளார்.

பயனற்ற வெட்டிப் பேச்சைத் தவிர்த்து முன்னேற்றமான சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் கைக்கொண்டால், வாழ்க்கை வளம்பெறும். இதுவும் வெற்றிக்கான வழிமுறை தான்.

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.



# சிலப்பதிகாரம் காட்டும் (காப்பிய) முதல் இரவு

எழுத்தாக்கம்- திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



நம் தமிழ்மொழி மிகப் பழமையானது. இதற்கு அணி சேர்க்கும் காப்பியங்கள் அநேகம். அவற்றுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்ற ஐந்தும் ஐம்பெரும்காப்பியங்கள் எனச்சிறப்பிக்கப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரம் அனைவரும் அறிந்த நூல். காரணம் இதன் கதாநாயகர்களான கோவலன், கண்ணகி, மாதவி ஆகியவர்கள் அனைவர்க்கும் அறிமுகமானவர்கள் பண்டைக்கால பாட்டிகள் இதைப் பற்றிக் கதையாகக்கூறுவது கேட்கச் சுவையாக இருக்கும் சிலம்பு +அதிகாரம்=சிலப்பதிகாரம். சிலம்பு என்பது பெண்கள் காலில் அணியும் ஓர் அணிகலன். இக் காப்பியத்தின் கருப்பொருளே சிலம்பு தான். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள் இவர் ஓர் இளவரசன் மட்டுமல்லாது துறவியும் ஆவார். தன் தமையனுக்காக அரச பதவியைத் துறந்தவர். இவர் தன் நூல் காட்டும் முதலிரவு பற்றிக் கூறுவது இலக்கிய இன்பம், காட்சியைக் காண்போமா!

இதன் கதாநாயகன் கோவலன் சிறந்த கலாரசிகன், நாயகிகளில் கண்ணகி கற்பில் சிறந்தவள். கற்புடைய பெண்ணுக்கு உதாரணம் என்றால் எவரும் கண்ணகியைத் தான் முதலில் கூறுவார்கள். அத்தனைச் சிறப்பான ஆரணங்கு. மாதவியோ, விலைமகளானாலும் குலமகளாய் வாழ்ந்து காட்டியவள். கோவலனும் கண்ணகியும் பெரும் செல்வந்தர்களான வணிகர்களின் வாரீசுகள். அக்கால வழக்கப்படி இவர்களின் சிறுவயது "மைனர்த் திருமணம்." பெற்றோர்களால் பேசி, ஏற்பாடு செய்யப்பட்டத் திருமணமே, குறித்த நன்னாளில் இவர்களின் திருமணம் வெகுச் சிறப்பாக நடந்தேறியது. அலங்கரிக்கப்பட்ட அறையில் இருவருக்கும் முதலிரவு! அறியாப் பருவத்து அணங்கு கண்ணகி, கண்கள் மிரள, பயத்தால் உடல் நடுங்க, தூணைத் துணையாகப் பற்றித் தலை தாழ்ந்து நிற்கிறாள். எதிரே ஏக்கத்தோடு காதல் கணவன்! ஏறெடுத்துப் பார்க்கக் கூட அஞ்சி நிற்கும் அணங்கை நோக்கி அண்ணல் கூறும் கவிதை இதோ!

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறுவிரையே! கரும்பே, தேனே நின்னை
மலையிடைப் பிறவா அமிழ்தே என் கோ!
அலையிடைப்பிறவா அமிழ்தே என் கோ!

யாழிடைப் பிறவா இசையே என்கோ! என்ற கோவலனின் வர்ணனைகளால் நாணிய கண்ணகி திரும்பி முதுகு காட்டி நிற்கிறாள். முதுகில் அவளது நீண்ட கருங்கூந்தல் கண்ணில் பட அவன் தாழிருங்கூந்தல் தையால் நின்னை என உலவாக் கட்டுரைப் பல பாராட்டி அதாவது காதல் மயக்கத்தில் பொருளற்ற உரைகளால் பாராட்டியும் கூட கண்ணகி பேசவில்லை. கண்ணகியின் இந்த அளவற்ற நாணம் கோவலனை மாதவியை நாடச் செய்தது என்பது தொடரும் கதை! இங்கு பேச்சிக்கு இடமில்லை. தொடுதல் இல்லை. அவள்மீது கோபமோ இல்லை, சீண்டலுக்கும் வன்முறைக்கும் இடமில்லை. உணர்ச்சிக்கு மதிப்பளித்து ஒதுங்கியதுடன் மனப் பக்குவத்துக்காக காத்திருக்க வேண்டியதாயிற்று ஆனால் விட்டதா விதி! மாதவி என்ற பெண்ணால் வாழ்க்கைத் திசை மாறிப் போனது மீதிக்கதை, நாம் அறிந்ததே.

தற்கால முதலிரவு அறை! மின் அலங்காரத்துடன் இனிப்பு வகைகள்! பழவகைகள் வைக்கப்பட்டுள்ளன. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மெத்தைக் கட்டில்! முன்னே வந்த மணமகன் அந்த ஏ.சி.அறையிலும் வியர்க்கக் காத்திருக்கிறான். கதவு மெல்லத் திறக்க, தோழியரின் கேலியுடன் கையில் பால்செம்புடன் அழகு நிலா முகம் காட்டுகிறது. அவளை அணைத்து வந்து கதவைத் தாழிட்டுபின் அவளைத் தன்னருகே அமர வைக்கிறான். காலில் விழுந்தவளைக் கட்டியணைத்து நிறுத்துகிறான். இருவரும் படித்தவர்கள், சம்பாதிப்பவர்கள், பெற்றோர் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்டத் திருமணம். அவன் பேச ஆரம்பிக்கிறான், "என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா? அவள் ஆம் என தலையசைக்கிறாள். சரி நம்முள் எந்த ஒளிவு மறைவும் வேண்டாம். நீ இதற்குமுன் அதாவது படித்த பள்ளி, கல்லூரி, வேலை பார்க்குமிடம், சொந்தத்தில் யாரையாவது காதலித்திருக்கிறாயா? அல்லது உன்னை யாராவது விரும்பியதுண்டா? அவள் தலை நிமிர்ந்து பார்க்கிறாள். உன் சம்பளப்பணம் உன் அக்கவுண்டில் தான் உள்ளதா, இல்லை உன் அப்பா கணக்கிலா? அவனை அலட்சியமாகப் பார்க்கிறாள். உன் தங்கை உன்னைவிட ஸ்மாட்டா இருக்கா, காலையில் பார்த்தேன். ஒரு ஏளனப்பார்வை பார்க்க, அவன் தடுமாறி "இந்த" பிரண்ட்ஸ் பயலுக சொல்லச் சொல்லக் கேளாமல் கொஞ்சமா வெளிநாட்டுச் சரக்கைத் தந்துட்டானுக சத்தியமா? எனக்கு இந்தப் பழக்கம் எல்லாம் கிடையாது. சரி சரி பால் பழத்தைச் சாப்பிடுவோம். வீணாகிவிடும். அதன்பின் விளக்கை அணை, நான் உன்னை... என்றதும் முறைப்புடன் எழுந்தவள் தரையில் போர்வையில் தனியாயப் படத்துவிட, அவன் மெத்தையில் தலையணைத்துணையுடன் துவண்டான். அவளுக்குத் தூக்கமா வரும்? "மவனே இரு இரு விடியட்டும் வைக்கிறேன் உனக்கு ஆப்பு" வக்கீல் நோட்டீஸ்சுக்கு ஏற்பாடு செய்கிறேன். பார், என கருவிக்கொண்டு விடியலுக்காகக் காத்திருந்தாள்.

இதையே இன்னொரு மணமகன் கையாளுவதைப் பாருங்கள்! முதல் இரவு அறை பால் செம்புடன் அந்த அலங்கார அறைக்குள் மணமகள் அடியெடுத்து வைக்க, அவன் வந்து கதவை மூடி, அவளை அணைத்து வந்து கட்டிலில் அவன் அருகே அமர வைக்கிறான் அவன் கால்களை வணங்கிய அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு கூறுவதாவது, உன்னைப் பெண் பார்க்க வந்த அன்றே எனக்கு உன்னை பிடித்துவிட்டது. உன் அழகில் மயங்கி நீதான் என் மனைவி என முடிவு செய்துவிட்டேன். இந்த புடவையில் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்? உன் நகைகள் உனக்கு எவ்வளவு எடுப்பாய் இருக்கிறது! நீ எனக்கு மனைவியாய் அமைந்தது எனது பாக்கியமே. காலமெல்லாம் நான் உன்னைக் கண்போல் காப்பேன் இப்படியெல்லாம் பாராட்டு மழை பொழிந்தால் அவளே எழுந்து பால் பழத்தை ஊட்டி விடுவாள். விளக்கையும் அணைத்து உம்மையும் அணைப்பாள். இல்வாழ்க்கை இனிதே தொடரும்... இதில் கற்பனை பாதி, கேட்டறிந்தது மீதி இலக்கிய முதலிரவுக்கும் இன்றைய முதலிரவுக்கும் எத்தனை வேறுபாடுகள் இதில் ஒருவரை ஒருவர் புரிதல்வேண்டும். மதித்தல் வேண்டும், உணர்ச்சிக்கு மதிப்பளித்தல் தேவை. அன்பும் ஆதரவும் இருந்தால் இல்வாழ்க்கைப் படகு இன்பமாய்ச் செல்லும்.




SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணா நகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு **தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424 E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**

# காமராஜர் ஒரு சகாப்தம்

ஏ.கோபண்ணா.

### விடுதலை வேள்வியில் காமராஜ்

விருதுபட்டியில் காங்கிரஸ் இயக்கத்திற்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் அடிக்கடி மோதல் நிகழ்வதுண்டு. அச்சமயத்தில் ஊர் மகமைகள் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு காட்டி வந்தனர். சில மகமைகள் இரு கட்சிகளுக்கும் ஆதரவு தந்தன. காமராஜ், ரயில்வே ஸ்டேஷனில் துரைக்கு முன் உண்டியல் குலக்கி நிகழ்த்திய சாதனையால், பஞ்சு வியாபாரிகளில் பெரும்பகுதியினர் காங்கிரஸில் சேர்ந்தார்கள். பஞ்சுப் பேட்டையைக் காமராஜ் காங்கிரஸ் கோட்டையாக்கினான். தேசத் தொண்டில் ஈடுபட்ட காமராஜ், எதையும் கேவலமாக நினைக்காமல் செயல்பட்டான். சாதி சமயம் பார்க்காமல் எல்லாருடனும் சமமாகப் பழகினான். வெளியூர்க் கூட்டங்களுக்குச் செல்லும்போது லாந்தர் விளக்கு, தமூக்கு முதலானவற்றைச் சுமந்து சென்றான். காமராஜின் செயல்களைப் பார்த்து வீட்டிலிருந்த பெரியவர்கள் மிகவும் வருந்தினார்கள். சுற்றத்தவர்களும் நாடார் இனத்தவர்களும் "நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பிள்ளை, இப்படி ஊர் ஊராகஏன் அலைகிறது?" என்று கவலைப்பட்டார்கள். "கால்கட்டு போட்டால் எல்லாம் சரியாகிவிடும்"என்று வீட்டில் திருமணப் பேச்சைத் தொடங்கினார்கள். அப்போது "தேசத்துக்கு விடுதலை கெடச்ச பிறகுதான் அந்தப் பேச்செல்லாம். இப்போ அது தேவை இல்லை" என்று திருமணப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான். காமராஜின் நண்பர்களான முத்துசாமியும் முருக தனுஷ்கோடியும் இறுதிவரை திருமணமே செய்து கொள்ளவில்லை. காமராஜ் தனது சித்னை, பேச்சு, செயல், சாதுர்யம் அனைத்தையும் தேச விடுதலைக்காகவே அர்ப்பணம் செய்துவிட்ட நிலையில், பந்த பாசங்களை அறுத்துக்கொண்டு, காந்தியடிகள் வகுத்த பாதையில் தொண்டனாகப் பயணத்தைத் தொடங்கினான்.

1921ஆம் ஆண்டு, காந்தியடிகள் மதுரைக்கு வந்தார். அப்போது ஞானம்பிள்ளையும் சுப்பராய பந்துலுவும் அவரைப் பார்க்க மதுரைக்குப் புறப்பட்டனர். காமராஜும் அவர்களுடன் சென்றான். முதல் முறை காந்தியடிகளைப் பார்த்தான். அவன் மனத்தில், காந்தியடிகள் விவரிக்க முடியாத ஒருவகை நல்லெண்ணச் செயல்பாட்டை ஏற்படுத்தினார். அன்று முதல் காந்தியடிகளே தன் வழிகாட்டி என எண்ணினான். காந்தியடிகளின் எளிமைக் கோலமும் மக்களுக்காகத் துன்பங்களைப் பொருட்படுத்தாமல் உழைக்கும் பண்பும் காமராஜைக் கவர்ந்தன. வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது, காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கையை முன்வைத்துக் காங்கிரஸ் இயக்கம், இளவரசரின் வருகையைப் பகிஷ்கரித்தது. அந்தப் பகிஷ்கரிப்பைக் காண ஷண்முகம் பிள்ளையுடன் காமராஜ் சென்னைக்குச் சென்றான். அங்கே காங்கிரஸ் இயக்கம் தன் பணியைச் செம்மையாக நிறைவேற்றிய முறையைக் கண்டு மகிழ்ந்தான். அதன் பின் காங்கிரஸ் இயக்கம் செயல்பாடுகளை விரைவுபடுத்த ஸ்டேட் (மாநிலம்), ஜில்லா (மாட்டம்), தாலுக்கா (வட்டம்) மற்றும் மாநகர அளவுகளில் கமிட்டிகளை உருவாக்கினார்கள். அப்போது விருதுபட்டி நக காங்கிரஸ் கமிட்டிக்கு முதல் தலைவராகப் பம்பாய் அண்ணாச்சி கோவிந்தசாமி நாடார் பொறுப்பு ஏற்றார். காமராஜ் அந்தக் கமிட்டியின் அங்கத்தினராகச் செயல்பட்டான். காமராஜ், காந்தியின் கொள்கையைப் பட்டித்தொட்டிகளில் பரப்பவும் மக்கள் உள்ளத்தில் சுதந்திர உணர்வை வளர்க்கவும் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கினான். காமராஜின் செயல்பாடு பெரியவர்களை மட்டும் அல்லாமல் இளைஞர்களையும் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு இழுத்து வந்தது. காங்கிரஸ் பேரியக்கத்தின் எதிர் காலத் தலைசிறந்த தலைவர் ஒருவர், விருதுபட்டியில் காமராஜ்என்கிற பெயருடன் தொண்டனாகச் செயல்பட வேண்டும் என்பதைக் காலம் முடிவு செய்திருந்தது.

- தொடரும்.....




AB

Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277

ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market)
M.G.R.Nagar, Chennai-78.

SSS

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை



திருமண தகவல் மையம்

அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!



Ph:28440171. 28442494.

E.D.THANGARAJAN & SONS

Authorised Stockist in: Indian Cement Ltd. & Zuari Cement Steel, Firewood, Charcoal, Bricks, Sand, Blue Metals etc.,

New No:14, (OldNo:10), Ganapathy Mudali Street, Triplicane, Chennai-5.
(Near Parthasarathy Swamy Temple)

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

**8.நாடார்களின் பிரிவுகள்**

**தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்**
**செல்:98412 26856.**



தர்மபூமி (1871) என்னும் நூலை எழுதிய இறைப்பணியாளர் சாமுவேல் மாட்டீர் (Rev Samuel Mateer) திருவிதாங்கூர் பகுதியைச் சேர்ந்த கன்னியாகுமரியில் இருந்து மூன்று கி.மீ.தொலைவில் அகத்தீஸ்வரத்தில் ஒரு கோயில் உள்ளது என்றும், இவ்வூர் சாணார் குடிகளின் தலைமை இடமாகக் கருதப்படுகிறது. என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

செணார்-கேரளாவில் மலபார் பகுதியில் உள்ள கள் இறக்கும் சாதியினாரான தீயர்கள் பிற சாதியினாரால் செணார் என்று குறிப்பிடப்படுகின்றனர். இவர்களும் சாணார்களின் இன்னொரு பிரிவினர் தான் என்றும், கல்வியறிவுக் காரணமாக சாணார்கள் சமூகத்தில் உயர்ந்து உள்ளதாக இறைப்பணியாளர் ஜே ஷர்ராக் குறிப்பிடுகிறார்.

சாணார் அல்லது சாணான் என்பது கேரளாவின் ஈழவர் மற்றும் தமிழ்நாட்டில் சாணார் / நாடார் இனத்தினர் ஆவார். தமிழ்நாட்டில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், கேரளாவின் ஆலப்புழை மற்றும் கொல்லம் மாவட்டங்களில் அதிக அளவில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் காணப்பட்டனர். அரசியலில் இருந்த சாணார்கள் பாரசீகக் கிறிஸ்தவர்களைத் தாக்கக் கூடாது என்பதற்கான உத்தரவை வழங்கியதாக 849ஆம் அண்டின் தரிசப்பள்ளித் தகடுகள் காட்டுகின்றன.

சாணார்கள் மலையாளத்தில் கொல்லத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர். சாணார் சமூகத்தின் உயர்ந்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் கிராமத்தலைவர்களாக இருந்தனர். அவர்களுக்குப் பின்னர் அந்தப் பொறுப்பு அவர்களின் மருமகனுக்கு (மருமக்கதாயம்) வழங்கப்பட்டது. ஈழவச் சாணார்கள் ஆங்கிலேயர்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். சாணார்கள் திருமணம் போன்ற சடங்குகளை நடத்தும் பொறுப்பு வகித்தனர். அதற்குக் கூலியாக புகையிலையைப் பெற்றுக் கொண்டனர்.

சாணான் என்ற பெயர் தங்களை இழிவுபடுத்துவதாக இருக்கிறது என்று நாடார் வணிகர்கள் கருதினார்கள், ஆகையால், 1921ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடார் மகாஜன சங்கம் செயற்குழு பெயரை மாற்ற வேண்டும் என்று தீர்மானம் இயற்றி, அதன்படி அரசு தலைமைச் செயலருக்கு ஒரு கடிதத்தைக் கீழ்க்கண்டவாறு எழுதியது.

1.சாணான் என்ற சொல் தவறானதும், அவமதிப்பானதுமான தன்மையைப் பெற்று விட்டது.

2.சாணார்கள் என்று அழைப்பதால் நாடார்கள் ஆத்திரம் அடைகிறார்கள்.

3.நாடார்களை அவமரியாதைக்கு (அ) நாணத்திற்கு உள்ளாக்க வேண்டுமென்று அவ்வாறு அழைப்பதைத் தவிர, நடைமுறையில் அவ்வாறு அழைக்கப்படுவதில்லை.

4.பத்திரங்களிலும், நீதிமன்ற ஆவணங்களிலும் நாடார்களை "சத்திரியர்கள் (அ) நாடார்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

5.சாணான் என்ற சொல் வெகு காலத்திற்கு முன்பே வழக்கொழிந்து விட்டது. ஆனால், அரசு ஆவணங்களில் அந்த வார்த்தை இன்னும் பயன்படுத்தப்படுகிறது.

"சத்திரியர்" என்ற சொல்லைப் பயன்படுத்த மதுரை கலெக்டரும் மற்றவர்களும் மறுப்பு தெரிவித்தனர். மக்கள் தொகைப் கணக்கெடுப்பு சம்பந்தமாக சங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, நாடார்-சத்திரியர் என்ற வார்த்தையைக் காட்டிலும் நாடார் என்ற வார்த்தையைப் பயன்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது. அதை செயல்படுத்த சென்னை அரசாங்கம், சட்ட பொது இலாகா, ஆணை எண்:785ஜ 07/07/1921இல் வெளியிட்டது.

ஏனாதி:

சாணார்களில் "ஏனாதி" என்ற பட்டம் இருந்ததாகவும், சைவ நாயன்மார்களில் (சான்றோர்) ஒருவரான ஏனாதி நாயனார் நாடார் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் கூறுகின்றனர். சிவனது அறுபத்தி மூன்று அடியார்களில் ஒருவர் ஏனாதி நாயனார்.

நாடார்கள் பற்றியப் புராண வரலாற்றில் கூறப்பட்டுள்ள பிரம்மாவுக்கு பிறந்த ஏழு குழந்தைகளில் ஒருவர் ஏனாதி நாயனாரின் முன்னோர் என்று வலங்கை நூலில் கூறப்பட்டு உள்ளது.

கி.பி.பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் ஏனாதி நாயனாரின் வரலாற்றை விளக்கித் தனிப் புராணம் பாடி உள்ளார்.

சோழ மண்டலத்தில் எயின்னூரில் ஏனாதி நாயனார் பிறந்தார். இப்போது அந்த ஊர் ஏனனூரென மருவி கும்பகோணத்திற்கு தென்கிழக்கில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. அங்கு அவருடைய ஞாபகமாகச் சிலை செய்து கோயில் கட்டப்பட்டுள்ளது (நாடார் குலமித்திரன் 2.9.1927- தொடரும்.....

ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியாபத்து வாக்கியம்
பஞ்சாங்க கணிதர் ஜோதிடர் K.M.துரைசாமி
நாடார் மகன் ஜோதிடர் C.T.சிவக்கொழுந்து
வேல் மகள்

**ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்**

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:94980 75679.





# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

பத்மஸ்ரீ டாக்டர் சிவந்திஆதித்தனார் சாதனைச் சரித்திரம் அ.மா.சாமி.

## பெரியன செய்த பெரியோன்

**பா.மதன் மோகன்.**

டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் குணசீலம் கோவிலில் மன நோயாளிகள் தங்கிக் கொள்ள அறைகள் கட்டிக் கொடுத்துள்ளார். இதற்குக் காரணமாக இருந்தவர், செங்கோட்டை பா.மதன். அது எப்படிக் கைக்கூடியது என்பதை இங்கு அவர் சொல்லுகிறார்.

திருச்சிக்கு அருகில் 18கி.மீ தொலைவில் காவிரிக் கரையில் குணசீலம் இருக்கிறது. இங்குள்ள பெருமாள் கோவில் மிகவும் புகழ் பெற்றது.

இக்கோவிலுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. மன நோயாளிகள் காவிரியில் குளித்து விட்டு, கோவிலில் தங்கியிருந்தால் குணம் பெறுவார்கள் என்பதுதான் அந்த சிறப்பு.

இவர்கள் தங்கிக் கொள்ள கோவிலில் சரியான வசதியில்லை. இவர்கள் தங்குவதற்கு அறைகள் கட்டக் கோவில் நிர்வாகிகள் திட்டமிட்டார்கள். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.45 இலட்சம்.

கோவில் திருப்பணி ஒருமுறை நானும் என் மனைவி மகேஸ்வரியும் இக்கோவிலுக்குப் போனோம். திருச்செந்தூர் கோவில் அய்யர் ஒருவரும் எங்களுடன் வந்திருந்தார். அவர் கோவில் நிர்வாகிகளுக்கு எங்களை அறிமுகம் செய்து வைத்தார்.

"சி.பா.ஆதித்தனார் இருந்தார் அல்லவா? அவருடைய அண்ணன் எஸ்.டி.ஆதித்தனின் பேரன், இவர் என்று என்னை அறிமுகப்படுத்தினார். "இந்த அம்மா திருச்செந்தூர் கணேச நாடாரின் பேத்தி" என்று என் மனைவியை அறிமுகம் செய்து வைத்தார்.

"சிவந்தி ஆதித்தனாருக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள் என்று சொல்லுங்கள்" என மகிழ்ச்சியுடன் கூறிய கோவில் நிர்வாகிகள், ஓடிப்போய் பெரிய நோட்டு ஒன்றை எடுத்து வந்தார்கள். அப்போது கோவிலில் திருப்பணி நடத்தவும் திட்டமிட்டிருந்தார்கள். கோவில் அவ்வளவு பழுதடைந்திருந்தது. பெருமாளைக்கூட கருவறையிலிருந்து வெளியில் கொண்டு வந்து வைத்திருந்தார்கள்.

பெரிய பெரிய தொழில் அதிபர்கள் திருப்பணிக்கு இரண்டு இலட்சம், ஐந்து இலட்சம் என்று நிதி எழுதியிருந்தார்கள். நோட்டைத் திறந்து அதைக்காட்டினார்கள். "ஆனால் இன்று வரை அவர்கள் ஒரு காசுகூட கொடுக்கவில்லை" என்று வருத்தப்பட்டார்கள்.

உதவி வேண்டும்: "நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும்" என்று என்னைப் பார்த்தார்கள்.

" என்ன செய்யவேண்டும்?" என்று நான் கேட்டேன். என்னிடம் திருப்பணிக்கு நிதி கேட்பார்கள் என்று எதிர்ப்பார்த்தேன். ஆனால், அவர்கள், "சிவந்தி ஆதித்தனார் பெரிய கொடை வள்ளலாக விளங்கிறார். இலட்சம் இலட்சமாகச் செலவழித்துக் கோவில் திருப்பணிகள் செய்கிறார். அவரிடம் சொல்லி, ஒரு ஐந்து இலட்ச ரூபாய் வாங்கிக் கொடுங்கள்" என்று தயவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அத்துடன் திருப்பணிச் செலவுகள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் என் கையில் வைத்தார்கள். ரூ.5இலட்ச முதல் ரூ.45இலட்சம் வரை பல திட்டங்கள் அதில் இருந்தன.- தொடரும்.........

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

**நுரையீரலின் நலம்**

✱ **கேள்வி:**

குறட்டை விடுபவர்கள் எல்லோரும் புண்ணியவான்கள் , எந்த கவலையுமின்றி நன்றாகத் தூங்குகிறார்கள் என்று எல்லோரும் நினைக்கிறோம். ஆனால், அது ஒரு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம் என்று கேள்விப்பட்டேன். இது பற்றி உங்களின் விளக்கத்தை எதிர்ப்பார்க்கிறேன்.

✱ **பதில்:-**

நம் சுவாசமானது மூக்கு, வாய், தொண்டை, மூச்சுக்குழல் வழியாக நுரையீரலுக்குச் செல்கிறது. இந்தப் பாதையில் எங்காவது தடை ஏற்படும் போது குறட்டை வருகிறது. விழித்திருக்கும்போது வராத குறட்டை தூங்கும்போது மட்டும்தான் வரும்.

சளியுடன் கூடிய மூக்கடைப்பு, ஒவ்வாமை, சைனஸ் தொல்லை அடினாய்டு / டான்சில் வளர்ச்சி, மூக்குத் தடுப்புச்சுவர் வளைவு, தைராய்டு பிரச்சினை போன்றவற்றாலும் குறட்டை ஏற்படுவதுண்டு. மேற்சொன்ன பிரச்சினைகளுக்குச் சிகிச்சை எடுத்துக் கொண்டால், குறட்டையும் குட்பை சொல்லிவிடும். ஆனால் அதிக உடல் எடை மற்றும் கழுத்தைச் சுற்றிக் கொழுப்பு அதிகமாக இருப்பவர்களுக்கு குறட்டை என்பது நிரந்தரத் தொல்லை தருகிறது. கீழ்த்தாடை உள்வாக்கி இருந்தாலும் குறட்டை ஏற்படுகிறது. புகைப்பிடிப்பவர்கள், மது குடிப்பவர்கள், தூக்க மாத்திரை சாப்பிடுபவர்கள் ஆகியோருக்கும் இதே நிலைமைதான்.

குறட்டையைச் சாதாரணமானது என்று அலட்சியப்படுத்தவும் முடியாது. இதில் ஆபத்தும் உள்ளது. குறட்டையின் சத்தம் ஒரே சீராக இல்லாமல், அடிக்கடி கூடிக் குறைவதோடு, சில நேரங்களில் அறவே சத்தம் இல்லாமல் போவதை அப்ஸ்ட்ரக்டிவ் ஸ்லீப் ஏப்னியா என்று சொல்வோம் அப்போது மூச்சுக் குழாயில் முற்றிலுமாக அடைப்பு ஏற்பட்டு ஒட்டு மொத்த சுவாசமும் நின்றுவிடும். இதனால், மூளைக்குச் செல்லும் ஆக்சிஜன் அளவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து, ஒரு கட்டத்தில் முற்றிலுமாக நின்றுவிடும். ஆனால், இந்த மாதிரி நேரங்களில் மூளை விழித்துக்கொண்டு, உடலில் ஒருவித அதிர்வை உண்டாக்கி, சுவாசப் பாதை மீண்டும் திறந்து கொள்ள வழி செய்துவிடுகிறது. இதனால்தான், தூங்கிக் கொண்டிருப்பவரின் குறட்டைச் சத்தம் திடீரென்று நின்று விடுவதும், அடுத்த சில நொடிகளில் அவர் ஒடம்பைக் குலுக்கிக் கொண்டு மீண்டும் சுவாசிக்கத் தொடங்குவதும் நிகழ்கிறது.

ஒருவருக்கு இருக்கின்ற குறட்டை சாதாரணமானதா, ஆபத்தானதா என்பதைப் பொறுத்து அவருக்கு சிகிச்சை தேவைப்படும். இதற்கு ஸ்லீப் ஸ்டடி எனும் பரிசோதனை உதவுகிறது. குறட்டைக்குக் காரணம் எது என்பதைப் பொறுத்து லேசர் சிகிச்சை, சிபாப் சிகிச்சை, அறுவை சிகிச்சை என்ற மூன்று வித சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால் குறட்டை விடுபவர்கள் எல்லோரும் நலமானவர்களே என்று எண்ண வேண்டாம். அது ஒரு நோயின் விளைவாகவும் இருக்கலாம்.!

**தொகுப்பு: - எல்மாமதி..**

# உறவுகள்!

94.இறைபக்தி - மனித உறவுகளின் இணைப்புப்பாலம்

ஆனால் இறைபக்தியின் பரிணாமத்துக்கோ உலகம்கூட எல்லை இல்லை. பரந்துவிரிந்த பிரபஞ்சம் கூட அதற்கொரு அளவென ஆகாது. திசைகளாலோ, நேர காலங்களாலோ அதனைக் கட்டிப் போட்டுவிட முடியாது. மனித உறவுகளின் இணைப்புப் பாலமாக இருப்பது மனமாக இருக்கலாம். குணமாக இருக்கலாம். பணமாக இருக்கலாம் பாசமாக இருக்கலாம். பண்பாக இருக்கலாம் அன்பாக இருக்கலாம். கருணையாக இருக்கலாம். இரக்கமாக இருக்கலாம். கலையாக இருக்கலாம். அறிவாக இருக்கலாம் ஆற்றலாக இருக்கலாம். விழாவாக இருக்கலாம். விளையாட்டாக இருக்கலாம். விருதுகளாக இருக்கலாம். சேவையாக இருக்கலாம். தேவையாக இருக்கலாம். காலத்தின் கட்டாயமாகக் கூட இருக்கலாம். எல்லோரும் எல்லோருமாக இருப்பது இறைவனின் லீலை.

எல்லோரும் எல்லாமுமாகவும் இருத்தல் இயற்கையின் இயக்கமுறை. வேறுபாடுகள் பார்ப்பது மனிதனுக்குப் புரிந்த கலை. இந்து மதம் போதிப்பது போல எல்லாமும் எல்லாமும் தான். எதுவொன்றும் எதற்கும் தாழ்ந்ததல்ல. எது ஒன்றும் எதைவிடவும் உயர்ந்ததல்ல. ஏற்றத்தாழ்வு கற்பிப்பது மாந்தரின் கணிப்பு. இறைவன்தான் எல்லாமும் எனும்போது அதில் ஏற்றத்தாழ்வு எங்கிருந்து வரும்.

மரமும், செடியும், மண்ணும், விண்ணும், மனிதனும், பிற உயிர்களும், பிரபஞ்சத்தில் காணும் எல்லாமும் கடவுள் எனும்போது எல்லாமும் ஒன்றுதானே. சரிநிகர் சமம்தானே. மண்ணும், உயிரற்ற பொருட்களும், உயிர்களும் எல்லாமும் இறைவனின் கைவண்ணம் என்றால் எல்லாமும் புனிதம்தானே! புனிதத்தில் உயிருள்ளது, உயிரற்றது என்ற பேதமேது? எல்லாக் காலமும் நிலைத்திருக்கிற இறைவனை 50,60 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டுப் போகிற மனிதனால் அளக்கவும் முடியாது, கணிக்கவும் முடியாது, எங்கேயும் நிறைந்திருக்கிற இறைவனை எங்கோ தோன்றி, மறைகிற மனிதனால் முற்றும் உணர்ந்திட முடியாதே!

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-15

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.



சான்றோர் குல நாடார்களின் வரலாறு கி.பி.1600 ஆம் ஆண்டில் வில்லுப்பாட்டு ஆவணமாகப் பதிவுசெய்யப்பட்டுப் பின்பு பாடல்களிலும் கல்வெட்டுகள், செப்பேடுகளிலும் இடம் பெற்றிருப்பதை இந்தத் தலைப்பில் இந்தியன் நாடார் முரசின் கடந்த சில இதழ்களில் நான் எழுதி வந்ததைக் காணலாம்.

மானாட்டில் ஏற்பட்ட இந்த வரலாற்று எழுச்சி அந்நூற்றாண்டின் இறுதியில் கொங்கு நாட்டில் பரவலாகச் செப்பேடுகளில் பதிவாகியிருப்பதைக் கருமாபுரம், பெருந்துறை, அவல்பூந்துறை போன்ற இடங்களில் அமைந்துள்ள, அந்தண குருக்கள் தலைமை ஏற்றுள்ள சான்றோர்குல மடங்களில் உள்ள செப்பேடுகளின் வழியாக இதுவரைஅறிந்தோம்.

கொங்குப் பகுதி சான்றோர்குல நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாறு இப்பட்டயங்களில் பன்முகநோக்கில் பதிவாகியிருப்பதும் அவ்வரலாறு மானாட்டில் கிடைக்கும் ஆவணங்களில் அமைந்துள்ளதுபோல் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வரிசையில் இன்று கோவை மாவட்டம் அவிநாசி வட்டம் திருமுருகன் பூண்டி ஊரில் உள்ள ஈஸ்வரன் கோவில் சான்றோர் குலகுருவான அந்தண குலச்சிவாச்சாரியாரிடம் உள்ள இரு செப்புப் பட்டயங்கள் பற்றிப் பார்க்கலாம்.

கொங்கு நாட்டுச் சான்றோர் குலச் செப்புப் பட்டயங்களைப் பற்றி நெல்லை நெடுமாறன் அவர்கள் முதலில், 1997இல், திருநெல்வேலி தெக்ஷணமாற நாடார் சங்கக் கல்லூரி (கள்ளிகுளம்), வெள்ளிவிழா மலரில் எழுதியிருந்தார். பின்பு, 2001ஆம் ஆண்டு, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட தமிழில் ஆவணங்கள் என்ற தலைப்பிலான நூலில் அவற்றைப் பற்றி எழுதியிருந்தார்.

இந்த நூலின் 96ஆம் பக்கத்தில் அன்னார் கொங்கு நாட்டுச் சான்றோர்குலச் செப்பேடுகளில் உள்ள சான்றோர் வரலாறுகள் ஏனைய சான்றோர்குல வரலாற்று ஆவணங்களோடு ஒத்துள்ளன என்கிறார்கள்.

“கொங்கு நாட்டில் வழங்கப்பட்ட பட்டய ஆவணங்கள் ஏககாலத்தில் எழுந்தவை யானாலும் அவற்றுள் சான்றோர் சமுதாயம் பற்றிய பட்டயங்கள் தமிழகத்தின் பிற பகுதிகளில் அச் சமுதாயத்திற்குரிய பட்டயங்களோடும், அதற்குரிய மெய்க்கீர்த்திகள், கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், இலக்கியங்கள் ஆகியவற்றில் சொல்லப் பெறும் கருத்துகளுடனும் ஒற்றுமையுடையனவாக இருக்கின்றன, என்கிறார்.

நெல்லை நெடுமாறன் அவர்களும் அவருடைய நண்பர்களில் சிலரும் கருமாபுரம், பெருந்துறை, அவல் பூந்துறைப்பட்டயங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளனர். ஆனால் அந்த அளவு திருமுருகன் பூண்டியில் கிடைக்கும் இரு செப்பேடுகள் பற்றி அவர்கள் அறிமுகப்படுத்தவில்லை. நெல்லை நெடுமாறன் மட்டுமே அப்பட்டயங்களைப் பற்றிக் கொஞ்சம் அதிகமாகப் பதிவிட்டுள்ளது நமது பாக்கியமே ஆகும்.

காரணம் திருமுருகன் பூண்டியில் உள்ள சான்றோர்குலச் செப்பேடுகள் இரண்டும் தெளிவான கையெழுத்தில் எழுதப்பெறாதது ஒரு காரணம் ஆகலாம். உருவத்தில் அவை பிற செப்பேடுகளிலிருந்து சிறிதானவையும் கூட

முதலில் நெல்லை நெடுமாறன் அவர்கள் பதிவிட்டுள்ள இச்செப்பேட்டுச் செய்திகள் பற்றி அறியலாம். இவை கி.பி.1670வாக்கில் எழுதப்பெற்றவை ஆகலாம்.

“நாடார்களில் அடக்கமுடையார் (சான்றோர்), போரகமுடையார் என்ற இருபிரிவிலும் அமைந்தோர் இருந்துள்ளனர். அடக்கமுடையாராகிய நாடார்கள், நாடாதி நாடன் (சோழன்), நாட்டுவன் (நட்டாத்தி), மதுரையான் (பாண்டியன்), போரறமுடைய நாடார்களில் கோநாடன் (கொங்குச் சோழன்), சங்கன் (சங்காழ்வார்), கொங்கன்( சேரமரபினர்), கங்கன் (கொங்கணி) என்றும் ஏனாதி என்ற தலைமைப் பொறுப்பும் பெற்றி இந்த பெருமைக்குரிய வீர அரச மரபினர் என விளக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இவர்கள் புலிக்கொடி, இருமடக்கொடி, சிங்கக்கொடி, அன்னக்கொடி, அனுமக்கொடி, மீன்கொடி, (மகரத்தோரணம்) மற்றும் வெள்ளைக் குடையும் பிறப்பால் பெற்ற உரிமை மரபினர். சந்திரனை வாளாகப் பெற்றவர்கள் என்று கூறுவது பாண்டிய குலத்தினை நினைவூட்டுகின்றது. மதுரைவளநாடர், சோழ வளநாடர், கரிகால்சோழ நாடாதிபதி, சீர்கொண்ட மதுரை நாடர் என்றும் பெயர்பெற்றவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் இப்பட்டயங்களில் கையொப்பமிட்டவர்கள் நாடன், நாட்டுவன், நாடாதி, மதுரையான் என்று இட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத் தகுந்தது...” என்று எழுதியுள்ளார்.

“நாடார்களின் நாடுகள்” என்ற தலைப்பில் நெல்லை நெடுமாறன் அவர்கள் எழுதிய நூலை, நான் 2020ஆம் ஆண்டில் பதிப்புச்செய்து வெளியிட்டுள்ளேன். அதில், 90,91ஆம் பக்கங்களில் அண்ணார் கீழ்காணுமாறு திருமுருகன்பூண்டி செப்பேட்டில் உள்ள ஒரு செய்தியைக் கூறுவதாவது:

கி.பி.17ஆம் நூற்றாண்டிற்கான திருமுருகன் பூண்டி சேனாபதி குருக்களிடம் இருக்கும் செப்பேடுகள் வளநாடர் என்று உரிமை பாராட்டுவதுடன் மதுரை நகரை இக்குலத்தவர் ஆண்டதை உறுதி செய்வதுடன் பட்டத்தில் சூரியன், சந்திரன், வில்-அம்பு பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன.

“மண்டலங்களின் ஆட்சிக்கு உரிமை கோரிய இவர்கள் “குலமும் முப்புரி நூலுமுடையவர்” என்று சொல்வதிலிருந்து இவர்கள் இராசகுலத்தவர் என்பதில் ஐயமில்லை. முப்புரி நூலுடன் இம்மரபினரின் சிலை இருப்பதையும் அறிகின்றோம்” என்கிறார்.

“திருமுருகன் பூண்டிப் புராணம்” என்ற நூலைச் சுட்டி நெல்லை நெடுமாறன் அவர்கள் பாண்டியரை மகதரர் என்று கூறுவதாக அரச குலச்சான்றோர் ஏனாதிநாதர் என்ற தம் நூலில் (பக்கம் 67-68) நெல்லை நெடுமாறன் குறிப்பிடுகிறார்.

துளுநாட்டுப் பாண்டியர்கள் மகாதரர் எனப் பாண்டியர் செப்பேடுகள் கூறுவதாகச் சுட்டும் நெடுமாறன் அவர்கள், மஹத்தரர் (மகாரதர்)என்பார் சான்றோர்கள் என்றும் இவர்கள் சாசனங்களில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளனர் என்றும் ரஷ்ய நாட்டு அறிஞர் அன்தோவை குறிப்பிடுவதாக மேற்படி தம் நூலில் நெல்லை நெடுமாறன் (பக்கம்68) குறிப்பிடுகின்றார்.

கொங்குநாட்டுச் சான்றோர் குலத்தினர் கி.பி.17ஆம் நூற்றாண்டில் பட்டயங்களை வெளியிட்டுத் தம் இருப்பையும் தகுதிகளையும் அந்தணகுருவின் தலைமையில் தக்க வைத்துக் கொண்டதற்கு முன்பாகவே, அவிநாசி வட்டாரப் பாப்பார சான்றோர் குழுவினர் கி.பி.13ஆம் நூற்றாண்டில் அன்று ஆட்சியிலிருந்த கொங்குச் சோழனுக்குத் தங்கத்தை அளித்துத் தம் இராச தகுதிகளைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர் என்பதை விரிவாக நான், “சான்றோர்: வீரரா? அறிஞரா? அரசகுலத்தவரா? என்ற என்ற என்ற நூலில், 249 முதல் 264 ஆம் பக்கங்களில் எழுதியுள்ளேன்.

திருமுருகன் பூண்டி செப்பேடுகளில் சுட்டப்பெறும் ஏனாதிகள் பற்றி நெல்லை நெடுமாறன் அவர்கள் மேற்சுட்டிய என் நூலில் குறிப்பிட்டுள்ளதை ஆங்காங்கே நான் மேற்கோள்களாக அமைத்துள்ளேன்.

கொங்குநாட்டுச் சான்றோர்குலச் செப்பேடுகள் வழியாகவும் அங்குள்ள சான்றோர்குலத் தொடர்பான கல்வெட்டுகள் மற்றும் ஆவணங்கள் வழியாகவும் அரிய வரலாற்றுச் செய்திகள் சான்றோர் குலத்தினர் பற்றி அறியக் கிடக்கின்றன. இவற்றை முறைப்படுத்தித் தொகுத்தால் சான்றோர் குலத்தினரின் சமூகப் பண்பாட்டு வரலாறுகள் ஓரளவுமுழுமை பெறும் என நம்பலாம்.



அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



# சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

# செல்வராஜ் சூப்பர் மார்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com



S.ராஜையா நாடார்

# சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான
அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,
(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.



# அமிர்தகனி

## திருமண தகவல் நிலையம்



நாடார் சொந்தங்களுக்கு மட்டும் 9840948727.

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டகளை பிறப்பிடமாக கொண்டு, இங்கு வாழும்
அனைத்து வகை நாடார் சமூகத்தினருக்கும் வரன் பார்த்து கொடுக்கப்படும்.

மண் பொருத்தம், மனைப்பொருத்தம், மணப்பொருத்தம் இவை மூன்றுமே
திருமணத்திற்கு போதுமானது.

எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயல், சென்னை-600 063.

நேரம்:புதன், வியாழன், வெள்ளி மாலை 5மணி வரை.

# ஆர்.சித்தர்ராஜ் நாடார்

# குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



கல்வி கண் திறந்த காமராஜர் அவர்களுக்கு 122வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

**S.CHAKARAVARTHY** **Res:24988691; Cell:9841109459**

**Proprietor**

# கீதா காபி





**Dealers: Quality Coffee Seeds & Powder**

25, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4. போன்:24640470,
42066631,42102609,24640470

54,பி.பி.வி.கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4. போன்:24983350

தொகுப்பு:M.செசிலிஸ்டீபன்
இராஜாவூர், செல்:9486356746

# மரம் வளர்ப்போம் பசுமை நிற பனைமரம் வளர்ப்போம் தமிழக பசுமை பனைமர செழுமையே!!!

## நுங்கு, குறும்பல், வண்டி, பனம்பழம், பனம் கிழங்கு

வேந்தியார்-இவர்கள் பனையரசர்கள் சான்றார்களும் இவர்களே!!

நுங்கு வண்டியை ஒற்றை வண்டி, ஒற்றை குறும்பல் வண்டி, இரட்டை குறும்பல் வண்டி என்று இருவகையாக நுங்கு வண்டியை ஓட்டுவார்கள். இரட்டை குறும்பல் வண்டிக்கு இரண்டு குறும்பலையும் சேர்த்து முன்பாக வெட்டி செதுக்கியதன் இரண்டுக்கும் நடுவில் ஒரு சிறிய கம்பை பக்குவமாக இணைத்து மட்டையில் செய்யப்பட்ட கவட்டை பாகத்தை இணைத்த கம்பின் நடுவில் வைத்து உருட்டி உருட்டி ஓடும் இரட்டை, ஒற்றை நுங்கு வண்டி, உருண்டு ஓடும்.

பெண் பனையில் மட்டுமே நுங்கு காய்க்கும்.

நுங்கு பருவம் விளைந்து "பனம் பழம்" பருவம் வரும். பனம் பழம் பனை மரம் போன்று கருமை நிற தோலை உடையது. அத்தோலை உரித்தால் உள்ளே மாம்பழம் நிறத்தில் பனம் பழ வாசனையுடன் நார் நிறைந்த மாம்பழம் போன்ற குணத்துடன் காணப்படும். பழநார் கொட்டையோடு சப்பி சாப்பிடலாம், அடுப்பில் போட்டு சுட்டும் சாப்பிடலாம். அரிவாளால் பழத்தை மட்டும் சீவி எடுத்தும் அவித்தும், வேகவைத்தும் சாப்பிடலாம் அதிக நார் சத்து உள்ள உணவு அதன் ருசி சாப்பிடுவதற்கு மிகவும் கவர்ச்சிகரமானது. சாப்பிட சாப்பிட திகட்டாது.

ஒவ்வொரு பனம் பழத்திலும் விதைகள் இருக்கும். விதைகள் இரண்டு அல்லது மூன்று என்று இருக்கும் அதன் விதைகளை மண்ணில் வரிசையாக புதைத்து வைப்பார்கள். அதிலிருந்து வேர்போல் பனங்கிழங்கு முளைக்கும். கிழங்கின் முதல் பருவம். முளை கிழங்கு இது நார் இல்லாமல் மிகவும் மென்மையாக இருக்கும். குழந்தைகள் சாப்பிட பக்குவமாக இருக்கும்.

இரண்டாம் பருவம் விளைந்த பக்குவமான கிழங்குப்பருவம், இது மாவு தன்மையுடையது. இதை நன்றாக கடித்து சாப்பிட்டுவிட்டு நாரை வெளியாக்கி விடலாம். கிழங்கை இரண்டாகப் பிரிக்கும் போது பனை வரும் "பீலி" இளம் பருவத்தில் இருக்கும். மூன்றாம் பருவம் முற்றிய பருவம் இந்த கிழங்கு சாப்பிட அவ்வளவு மாவுச் சத்து இராது நார் அதிகம் நிறமான அடர்த்தியான மண் நிறத்தில் இருக்கும் அதன் உள் இருக்கும் பீலி மரம் வளர முகப்பில் சிறிய இளம் பச்சை நிற பனை இலை ஆரம்ப நிலையில் இருக்கும் கிழங்கை அவித்து சாப்பிடலாம். அடுப்பில் போட்டும் சுட்டும் சாப்பிடலாம்.

பனம் கிழங்கு தோண்டும் போது பனங்கிழங்கு, பனங்கொட்டைகளுக்கிடையே கிழங்கை சாப்பிட்டு வளர்ந்து கொண்டிருக்கும் ஒருவகை பொறித்த இறால் போன்ற வெண்ணெய் நிறத்தில், நல்ல உடல் உருண்டை வளைந்த பருமனோடு இரண்டு மூன்று இஞ்சி அளவில் பளபளவென்று பவள நிறத்தில் ஊடே காணப்படும். பூரான்கால்கள் போன்று கால்களும், ஒரு குழியில் ஐந்து ஆறு காணப்படும் அதை எடுத்து வெளியே வீசி விட்டு கிழங்கு தோண்டுவோம். இதன் பெயர் கங்காணம் என்றும் கடுக்காணம் என்றும் சொல்லுவார்கள். இந்த கங்காணத்தை வெளியே வீசிய உடனே காகம் தூக்கி பறந்துவிடும். காக்கைக்கு விருப்பமான உணவாகும். கங்காணம் கிழங்கை தோண்டி எடுக்கும் போது அதனோடு விதையும் சேர்ந்திருக்கும். அந்த விதையை இரண்டாக வெட்டினால் உள்ளே தேங்காய் பூ போன்ற தவுண் இருக்கும்இதற்கு "தவுண்" என்று பெயர் அது மிகவும் சுவை உள்ள உணவு. கிழங்கு தோண்டினால் கிழங்கு உணவாக உபயோகிக்கும் முன்னே தவுண் வெட்டி சாப்பிட ஆரம்பித்துவிடுவார்கள் இளம் கிழங்கிலிருந்து சுவையுள்ள தவுண் இருக்கும். முற்றிய கிழங்கு உள்ள விதையிலிருந்து கஞ்சி தவுண் கிடைக்கும் அது கஞ்சி போல் தான் இருக்கும் ஆனால் வயறு சீக்கிரம் நிறைந்துவிடும் தவுண் வெட்ட சுற்றியுள்ளோர் எல்லோரும் சேர்ந்து வெட்டி சாப்பிட்டு மகிழ்வோம். கிழங்கு தோண்ட நான் என் அண்ணன் ஜூலியன், அக்காள் அன்னக்கிளி மூவரும் விளைக்கு (காட்டுக்கு) மண்வெட்டி, அரிவாள், நார் பெட்டியுடன் போவோம். பனம் விதை கிழங்காக மாறும் பின் அதன் பீலி ஓலையாகவும் கிழங்கிலிருக்கும் வேர் பனைவேர்களாகவும் மாறிக் கொண்டே பனை மரம் வளரும். இதன் பீலி பெரிதாகி இதன் வேர்கள் மண்ணில் ஊன்றி வளர ஆரம்பிக்கும். ஆரம்பத்தில் இதற்கு உணவு கிழங்கு, விதையில் உள்ள தவுண், பின் வேர்கள் மண்ணிலிருந்து நீர் உறிஞ்சி இலைகள் பச்சைநிறமாகி உணவு சேகரித்து மட்டையுடன் அழகிய இளம் பருவத்தை உடைய பனைமரம் வளர ஆரம்பிக்கும். இளம்பருவத்தில் இதன் பெயர் "வடலி" மிகவும் அழகாக செழிப்புடன் பசுமையாக காணப்படும் இளைஞர்களை விடலைகள் என்று அழைப்பார்கள் வடலிகள் போன்று அழகர்கள் என்று பொருள். இதன் மட்டைகளின் இருபுறமும் வாள் போன்று அறம் போன்றும் முள் இருக்கும் இதற்கு கருக்கு மட்டை என்று பெயர். ஆங்காங்கே பனம் பழங்கள் விழுந்து முளைத்து விளைகள் பச்சை நிற பசுமை நிறை வடலி விளையாக மாறி இருக்கும். வளர்ந்த பனை மரங்களுடன் நெருங்கிய வடலி மரங்களையும் கொண்ட பனம் விளைகள் பனை மரச்சோலைகளாக கண்ணுக்கு குளிமையாக கற்பக சோலையாக காட்சியளிக்கும். இந்த வடலி ஓலைகள் மட்டையுடன் மிகவும் அழகாக விசிறி போன்று காணப்படும். கருக்கு மட்டையோடு வெட்டி கருக்கை வெட்டி சுத்தம் செய்து விசிறி செய்து கோடைக்கால வெப்பத்தை தோற்கடிப்பார்கள்.

நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான

நாடார் விவாகம் திருமணத் தகவலகம்



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202
செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.
nadar vivaham matrimony / www.nadarvivaham.in /
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 3.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

தென்றல் திருமணத் தகவலகம்

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,




M.செசீலி ஸ்டீபன்.

இராஜாவூர்,செல்:9486356746




# தேன் - தேனீக்கள்:

புன்னை மரத்தில் மலர்கள் அதிக அளவில் பூத்துக் குலுங்கும் போது தேனீக்கள் பூவின் மதுரநீரை (nectar) நெக்டரை எடுத்து அதிக தேன் சேர்க்கும் எந்த புயல் மழைக்கும் சாய்ந்திடாத உறுதியான மரம் மேலும் பூச்சி, கரையான்கள் அரிக்க முடியாத உறுதியான மரம் ஆகவே தேன் பெட்டி, அதன் உள் வைக்கும் சட்டங்கள் செய்ய இந்த புன்னை மரக்கம்புகளை தான் உபயோகிக்கிறார்கள். இவ்விதமே நவ்வல் மரம், புளிய மரம், பூக்களிலும் மலர் மலரும் போது தேனீக்கள், தேன் அதிகம் சேர்க்கும். ரப்பர் மரத்தில் இலைஉதிர் காலத்தில் இலைகள் உதிர்ந்து மரம் மொட்டையாக காணப்படும். பின் இலை துளிர் துளிர ஆரம்பிக்கும் (அதிகமாக) இந்த இலை துளிர் இரண்டு மூன்று இலைகளுடன் ஆரம்பமாகும்போது அதன் காம்பு பாகத்தில் இனிப்பு நீர் (நெக்டர்) சுரக்கும் இந்த இனிப்பு நீரை நெக்டரை தேனீக்கள் வேகமாக உறிஞ்சி தங்கள் கூட்டில் சேர்க்கும். இந்த நேரங்களில் தேன் வளர்ப்போர் ரப்பர் தோட்டங்களில் தங்கள் தேன் பெட்டிகளை ஒவ்வொரு மரத்தின் மூட்டிலும் வைத்திருப்பார்கள் நல்ல நிறைய தேன் கிடைக்கும். கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை மற்றும் கேரளா, கொல்லம் போன்ற இடங்களில் இவ்வித தேன் பண்ணைகளைக் காணலாம். தேனீக்களில் ஒரு குழு அதிகாலையில் தேன் இருக்கும் மலர்களை தேட போகும். தேன் எடுக்கும் மலர்களைத் தேடி கண்டுவிட்டால் சந்தோசத்தில் நடன முறையில் பறந்து வந்து தங்கள் சக தேன் சேகரிக்கும் குழுவினருக்கு தெரிவிக்கிறது. இவர்களின் நடன முறை இறக்கை அசைவுகளை பார்த்து புரிந்து தேன் எடுக்கும் குழுக்கள் வெளியில் வரும் அவர்களை கூட்டிச் சென்று தேன் எடுக்கச் செல்லும் பலமுறை தேன் எடுத்து சென்றும், வந்தும் கொண்டு இருக்கும். இந்த குழுக்கள். ஒரு குழு தேனீக்கள் கூட்டின் உள்ளே உள்ள வெப்ப சீதோஷணத்தை தக்கவைக்க தங்கள் இறக்கைகளை அசைத்து காற்று வீசும், ஆகவே இறக்கைகளின் அதிவேக அசைவின்போது, ரீம்....ரீம்...ம்..... ரீங்காரமிடும் என்ற சப்தம் கூட்டில் இருந்து வருவதை நாம் கேட்கலாம். இந்த காற்றானது கூட்டின் வெப்பத்தை குளிர வைத்து தக்கவைப்பதோடு சேகரித்த தேன் அறுகோண செல்லில் இருப்பதில் சிறிது தண்ணீர் கலவையிலிருக்கும் அதையும் உலர வைக்கிறது. மேல்பாகத்தில் தேன் அறையும், கீழ்பாகத்தில் குஞ்சுபொரித்து, முட்டை இடும் ராணித் தேனீகள் அறைகளும் இருக்கும். ஆகவே மேலே தேனறைகள் என்றும் கீழ்பாகம் குஞ்சறைகள் என்றும் அழைப்பார்கள்.



ஒரு கூட்டில் ஒரே ஒரு ராணித் தேனீ மட்டும் தான் அனுமதிக்கப்படுகிறது. இதன் வேலை முட்டையிடுவது மட்டும்தான். வேலைக்காரத் தேனீக்கள் ராணித்தேனீ இடும் முட்டைகளுக்கு தரம் பார்த்து உணவூட்டி பராமரிக்கும். ராணித்தேனீ உற்பத்தி செய்யவேண்டுமானால் ராணித்தேனீ இடும் முட்டையில் ஒன்றின் அறையை சிறிது பெரியதாக்கி தரும் ஏனெனில் ராணித்தேனீ மற்ற ஈக்களை விட உருவத்தில் சற்று பெரியதாகவும், நிறத்தில் சிறிது கருப்பாகவும் தனியாகக் காணப்படும். ராணித்தேனீ உற்பத்தி செய்ய வேலைக்காரத் தேனீ உயர்தர உணவு ஊட்டுகிறது. வேலைக்காரத் தேனீ தங்கள் தலையில் சுரக்கும் பால், மகரந்தம் இரண்டும் சேர்த்து உருவாகும் ராயல்ஜெல்லி என்ற ராஜ உணவை மட்டும் ஊட்டி ராணித்தேனீ உருவாகிறது. அடையை பார்த்தால் ராணித்தேனீ ராயல்ஜெல்லி ஊட்டப்பட்டு ராணித்தேனீ உருவாகும் செல் மற்ற செல்களைவிட வித்தியாசமாக பெரியதாகவும் கொஞ்சம் நிறத்திலும் இளம் நரை வெண்ணெய் நிறத்தில் காணப்படுகிறது. தொடரும்......





## M.அருணாசலகணி வழக்கறிஞர்

## சென்னை உயர்நீதிமன்றம்,

**ஈக்காட்டுத்தாங்கல் நாடார் நல சங்கம் மற்றும் சென்னை வாழ் தீத்தாம்பட்டி நாடார் சங்கத்தின் சட்ட ஆலோசகர் ஆவார்.**

இவர் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை சேர்ந்தவர். நாடார்களின் சட்ட தேவைகளை புரிந்து கொண்டு சிறப்பாக பணியாற்றக் கூடியவர். சென்னை சவுகார்பேட்டையில் அலுவலகம் வைத்து கடன் சம்பந்தமான வழக்குகளை சீரிய முறையில் நடத்தி வருகிறார் பெருந்தலைவர் காமராஜர் மீது தீவிர பற்று கொண்டவர். அனைவருக்கும் பெருந்தலைவரின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்!! 9840267157

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

18.இந்த மாதிரியான நெருக்கடி எதுவுமே இல்லாமல், காரக்குழம்புக்கு தேவையான எல்லா பொருட்களுமே சமையல் அறையில் இருந்தாலும்கூட, அதற்காக மிளகுதூள், மல்லித்தூள், சீரகத்தூள் என்று ஒவ்வொரு பொருளையும் தேடிப்பிடித்து சரியான அளவில் சேர்த்து அந்த குழம்பை தயாரிக்கவேண்டும். அந்த ஒவ்வொரு பொருளையும் எடுப்பதற்கும், சேர்ப்பதற்கும், சரியான அளவில் கலப்பதற்கும் அதிக நேரத்தை செலவிடவேண்டியதிருக்கும். அந்த மாதிரியான சிக்கல்கள் எதுவும் இல்லாமல், சமையலை எளிமைப்படுத்தும் விதத்தில், ஆச்சியே ஒரு பாக்கெட்டில் 12 விதமான குழம்புகளை தயாரிக்க தேவையான எல்லா மசாலாக்களையும் சேர்த்து சமையலறை வரை கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. அதனால் நினைத்த நேரத்தில், நினைத்த குழம்பை தயாரிக்க முடிகிறது. பெண்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டார்கள். இதனால் காலைநேர கலாட்டாக்கள் குடும்பங்களில் ஏற்படவில்லை. குடும்பங்கள் அமைதிப்பூங்காவாகிவிட்டன.

ஆனால் இந்த மிகப்பெரிய முயற்சி எப்படி வெற்றிகரமானது?

"ஆச்சி" 12 விதமான குழம்புகளை தயாரிக்கும் பலவித மசாலாக்களை பக்குவமாக கலந்து ஒரே பாக்கெட்டில் அடைத்து, ஒவ்வொரு சமையல் அறைக்குள்ளும் கொண்டு சென்றது மிக எளிதான காரியமா?

அது ஒரு மேஜிக் போன்று கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட அதிசயமல்ல! மாபெரும் கனவு. மிகப்பெரிய ஆராய்ச்சி. திட்டமிட்ட உழைப்பு. 12 விதமான குழம்புகளுக்கான மிகளகாய்த்தூளை செயலாக்கத்திற்கு கொண்டுவர, எத்தனையோவிதமான திட்டங்களும், செயல்பாடுகளும் தேவைப்பட்டிருக்கின்றன. இதற்காக பத்மசிங் ஐசக் அவர்களும் ஆறுமாதங்கள் இரவு-பகலாக உழைத்தார்கள். பல்வேறு விதமான மசாலாக்களை, மிக கவனமாக, மிகுந்த தரத்தோடு தயாரித்தார்கள். பின்பு ஒவ்வொன்றையும் வெவ்வேறு அளவுகளில் கலந்து ஒன்றாக்கி இருக்கிறார்கள். அவைகளை பயன்படுத்தி பல்வேறு வகையான குழம்புகளை தயாரித்திருக்கிறார்கள். அவைகளை ருசி பார்த்து, மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

திருப்தி ஏற்பட்டதும் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு அதை வழங்கி, ருசியை பற்றி கேட்டறிந்து சார்ட் தயாரிக்கிறார்கள்.

அப்போது பத்மசிங் ஐசக்கின் வீடு ஒரு மினி ஹோட்டல் போன்று இயங்கியிருக்கிறது. புதிது புதிதாக குழம்பு வகைகளை உருவாக்கி ருசி பார்த்து வகைப்படுத்திக்கொண்டே இருந்திருக்கிறார்கள். தெல்மா ஐசக் 12ம் வகுப்பிலே கற்ற "ஹோம் சயின்ஸ்" கல்வியும் அற்புதமாக கைகெடுத்திருக்கிறது. சுவைத்தவர்கள் எல்லாம் 100 தவவீதம் திருப்தி தெரிவித்த பின்புதான் அந்த பார்முலாவை அங்கீகரித்திருக்கிறார்கள்.



ஆச்சி மசாலாவை அறிமுகம் செய்து சந்தைப்படுத்திய ஆரம்ப காலத்தில், நீலத்திற்கு ஏற்பட்டது போன்ற வியாபார நெருக்கடி பத்மசிங் ஐசக்குக்கு ஏற்படவில்லை. தரம், ருசி, ஆரோக்கியம், நேர சிக்கனம், எளிமையான தயாரிப்புமுறை, குறைந்த பணச்செலவு போன்ற பல பலன்கள் சமூகத்திற்கு அதன் மூலம் கிடைத்ததால் ஆச்சிக்கு பெண்களின் ஒட்டுமொத்த ஆதரவு தொடக்கத்திலேயே கிடைத்துவிட்டது. அதனால் வியாபார நெருக்கடிகள் பெரிதாக எதுவும் ஏற்படவில்லை. குறுகிய காலத்திலேயே ஆச்சி அமோக வளர்ச்சி பெற்றது.

19.ஆச்சி ஒரு ஆரோக்கிய பல்கலைக்கழகம்!

அமெரிக்காவின் மாபெரும் தலைவர் மார்ட்டின் லூதர்கிங்கின் வெற்றிப் பொன்மொழிகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தவை?

1929ம் ஆண்டு பிறந்து 1968ஆம் ஆண்டுவரை வாழ்ந்த மாபெரும் அமெரிக்க தலைவரான அவருக்கும் - நமது காந்திஜிக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. கறுப்பான மக்களின் உரிமைகளுக்காக மகாத்மாவின் அகிம்சை வழியில் அவர் போராடினார். அதனால் கறுப்பு காந்தி என்ற அழைக்கப்பட்டார்.. அவரைப்போல் இவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மார்ட்டின் லூதர் கிங்கன் பொன்மொழிகளில் எனக்கு பிடித்தமானவை.

ஒரு எதிரியை நண்பனாக மாற்றும் திறன்படைத்த ஒரே சக்தி அன்பு மட்டுமே!

இருளால் இருளை நீக்க முடியாது. ஒளியால் மட்டுமே அதை செய்ய முடியும். அதுபோல் வெறுப்பால் வெறுப்பை நீக்க முடியாது. அன்பால் மட்டுமே அதை செய்ய முடியும்.

வரையறுக்கப்பட்ட அவமானங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் ஒருபோதும் எல்லையற்ற நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது.

சரியான செயல்களை செய்வதற்கு நேரம் எப்போதும் சரியாகவே இருக்கிறது.

-ஏ.டி.பத்மசிங் ஐசக்




காமராஜர் 122வது பிறந்த நாள் வாழ்த்து



Prop.S.Vijayan,

Cell: 98403 53031. (0)044/ 26623031.

SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.





**கல்வி கண் திறந்த**
**கர்மவீரர் காமராஜர்**

**122வது பிறந்தநாளில் வாழ்த்தி வணங்கும்!!**

**Dr. S.R.கிறிஸ்டோபர்**
**தலைவர்**
**மதுரவாயல் மேற்கு பகுதி காங்கிரஸ் கமிட்டி**

எண்:70, ஆற்காடு சாலை, வளசரவாக்கம், சென்னை-600 087. செல்:9444180887, E-mail:cjebraj@gmail

---



**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!**

# தமிழ் திருமண மாலை

**நாடார் வரன்கள் தகவல் நிலையம்**

போரூர், சென்னை-600 116.

**திருமண ஆலோசகர்கள்:T.செந்தூர்பாண்டியன்(ஜோதிட சிந்து)9884040906**
**திருமுருகன் செல்:9382189766.**

---

ஸ்ரீ கள்ளகொண்டான் சுவாமி துணை



காமராஜர் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

A.K.R.பொன்மணிநாடார்

# ஸ்ரீ தேவி பாத்திரக்கடை &பர்னிச்சர்ஸ்

எங்களிடம் அனைத்து திருமண சீர்வரிசை சாமான்களும், சில்வர், பித்தளை, அலுமினியம் சாமான்களும், பர்னிச்சர்ஸ் பொருள்கள், கட்டில், மெத்தை பீரோ, மர பீரோ, மரகட்டில், குறைந்த விலையில் கிடைக்கும்

மயிலாடுதுறை ரோடு, வைத்தீஸ்வரன்கோயில் 9944115031, 8667038913.

---



**பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு 122வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.**

வே.சுபாகரன் உரிமையாளர்,போன்:24852128,24892154

# வேலன் ஸ்டோர்

உயர்ரக மளிகை பொருட்கள்

நெ.52, 10வது அவென்யூ,அசோக் நகர், சென்னை-83

அனைத்து பொருட்களுக்கும் 2% தள்ளுபடி விலை

டோர் டெலிவரி இலவசம்



ஸ்ரீ பொன் படைப்போர் ஐய்யனார் துணை

காமராஜர் 122வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ ஈஸ்வரி ஸ்டோர்

அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

இங்கு மாட்டுத் தீவனம் கிடைக்கும்.



உரிமை:ஆர்.கருப்புசாமி

5/19, அனுமந்தபுரம் ரோடு, சிங்கபெருமாள் கோயில், செல்:9944926488, 9941946422, 8012694685, 9003271615.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

R. ARUMUGAM, 9840233872. S.PRABAKARAN, 9962665162.

# AMUDHAA HOTEL

No:68-D, Valmiki Street, Thiruvamiyur, Chennai-41.

NO:22, Kannagi Street, Anbalagan Nagar, Taramani, Chennai-113

காமராஜர் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

# T.T.S.S.நாடார் திருமண தகவல் தொடர்பு நிலையம்

பு.எண்:48, ப.எண்:23, போஸ்டல்காலனி 1வது தெரு, மேற்குமாம்பலம், சென்னை-33. போன்:9710267593, வாட்ஸ்அப்:9710267593.

ஆலோசகர்:S.K.மகாலிங்கம் நாடார், எங்களிடம்:இந்து நாடார், நெல்லை-தூத்துக்குடி மற்றும் அனைத்து மாவட்ட ஆண்/பெண் வரன்கள் (B.E.M.E, MBA, B.Tech, MCA) படித்து வேலைபார்க்கும் மற்றும் வியாபாரிகள் ஜாதகங்கள் உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677 7200506699.



# JEHOVAH

GROUP OF COMPANIES

- Lab Ezuipments Manufacturing
- Industrial Lunricant Distributor
- Automotive Lubricant Distributor
- Industrial Equipments & Spares



E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com

No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

கல்வி கண் திறந்த காமராஜர் அவர்களுக்கு 122வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!

# விஜய் ஆப்டிகல்ஸ்







- Eye Testing
- Spectactes
- Contact Lens
- Sun Glasses

114, பஜார் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன்:24340895.

கருப்பசாமி துணை - செங்காட்டுடையவர் துணை

**காமராஜர் ஐயாவின் 122வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!!!**



# வளரும் ஐயனார் ஸ்டோர்



**இங்கு அனைத்து மளிகை பொருள்களும்**
**மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.**

11/245. காமலாபுரம் வண்டித்தடம், ஓமலூர் (தாலுகா), சேலம் மாவட்டம், பின்கோடு-636

---

கல்விக்கண் திறந்த காமராஜரின் 122வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!!!



SJM

Ph: 2535 7787
044-42157787.

# S. JAYA MURUGAN METALS

*Dealers: Aluminium Vessels*

**# 10. Paramasiva Chetty Street,**
**Parktown Chennai-3**



S. Jayapal Nadar

---

**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!**

# சண்முகா ரியல் எஸ்டேட்

**Prop. S.Maheswaran**

**(Land & Plots Buying & Selling)**



செம்பாக்கம் வட்டார வியாபாரிகள் சங்கம் 5, வேளச்சேரி மெயின் ரோடு,
**Plot No:2, D.No:2/38, Velachery Main Road,**
**Gowriwakkam(P.O), Chennai-73.**
**www.shanmugaarealestate.com**
**E-mail:contact@shanmugaarealestate.com**
**Cell:9444003451. Ph:044-22780280 Fax:(044) 22780790.**



---

காமராஜர் அவர்களின் 122வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ ஜோதி முருகன் எண்டர்பிரைசஸ்

மரம், ஓடு, கதவு, மாம்பலகை, சிமெண்ட் சீட், ஸ்டீல் பைப்
ஹார்டுவேர் பிளைவுட் வியாபாரம்

1/6, புகழ் காம்ப்ளக்ஸ், தருமபுரி மெயின் ரோடு, ஓமலூர்-636455.
செல்:9543441209.

---

**கல்வி கண் திறந்த காமராஜருக்கு 122வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!**



# ஸ்ரீகண்ணன் பழமுதிர்ச்சோலை

***1 சௌந்தேரஸ்வர் தெரு, (சௌந்தரேஸ்வரர் கோயில் தெரு அருகில், சைதாப்பேட்டை, சென்னை- 600 015)***

P.**நாராயணமூர்த்தி** செல்: 9444422727, 9176838345.
N.**தினேஷ்** செல்:72991483038



## கிறிஸ்துவின் படைப்புகளில் உண்டான கிருபையின் ஜெப வீடு

முதன்முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்துவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பை பெறுவான். நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும், விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீமானது பாவத்தின் நிமித்தம் மாத்தாயும் ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கிறது. ரோமர்:8-9, 10 திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்பவர்களாய்இருங்கள். அப்பா பிதாவே என்கிற ஆவி உள்ளவன் தான் கிறிஸ்துவின் பிள்ளைகள் மீதியுள்ள யாருவரும் அவரின் மேய்ச்சலில் ஆடுகள். கிறிஸ்தவர்கள் அல்ல. உலகத்தில் அப்போஸ்தலர் "சீசர்கள்"இல்லை. இயேசு ஒருவரே அப்போஸ்தல ஊழியகாரர், எல்லா ஜனங்களுக்கும் ஆண்டவர். எல்லா ஜனங்களையும் ஒரே ரத்தத்தால் தோன்றப்பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து சகல ஜனங்களின் பாவங்களை மன்னிக்க சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். இப்போது சகல ஜனங்களையும் ஒரே நற்க்கிரியையினால் மீட்பதற்கு என்னை வேலியடைத்து இந்த நற்க்கிரியை செய்து வருகிறார்.

நற்க்கிரியை: அவருடைய நாமம், வசனங்கள் மனப்பாடம் பண்ணி உரத்த சப்தம் "கற்பனை மிகமுக்கியம்" ஒருவேளை ஒரு மணிக்கூர் குறைவில்லாமல், நீட்டு முட்டி, ஆவியானவர் எவுதலில் பாடல்களான பெர்மாஸ் பாடல்களை பாடி அவரிடத்தில் அன்பு கூர்ந்து விண்ணப்பம் பண்ணு. நம்முடைய ஜெபம் கேட்கப்படும்.

மனுச குமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அனேகரை மீட்கும் பொருட்டாகத் தன் ஜீவனை கொடுக்கவும் வந்தார். எனக்கு பின் வருகிறவரோ. என்னிலும் வல்லவராய் இருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்னியானாலும் உங்களுக்கு ஞான ஸ்தானம் கொடுப்பார். கிறிஸ்து இயேசுவின் விசுவாசிகளாய் இருக்க வேண்டும். "அப்போஸ்தலர் 19:4 மத்தேயு 3:11 மத்தேயு 20:28" படித்தபோது எதுவும் புரியவில்லையா? உலகில் ஊழியகாரன், ஊழியகாரி என்று சுற்றி திரிபவர்கள் கள்ளனும், கொள்ளைகாரிகளும். மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள். நீங்கள் கொடுக்கும் ஞானஸ்தானத்தினால் இயேசு கிறிஸ்துவினுடைய ரத்தம் இல்லை. ஏன் ஞானஸ்தானம் கொடுக்கிறீர்கள். சபைகளை மூடிவிடுங்கள். நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமல் இருக்கிறீர்கள். யோவான்:10:26 இஸ்ரவேல் ஜனங்கள் "ஆர்.சி" தேவாலயங்கள், விக்கிரக கோட்டைகள், ஆவியில்லை இதயத்தில் விருத்தசேதனம் இல்லாதவர்கள். எரேமியா 10:14, 9:26. இயேசு ஆவியை விடும்போது தேவாலயத்தில் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது. ஆதலால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் யாவும் ஒழிந்து போயின. யாவரும் மனம் திருந்தி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது. மீண்டும் அவரது பிள்ளைகளாய் ஏற்றுக் கொள்வார்.

ஆபிரகாமுக்கும், ஆகாருக்கும் பிறந்த மகன் இஸ்மவேல். அந்த ஜனங்கள் கர்த்தரின் நாமமாகிய அல்பாவும், ஒமோகவும் ஆதியும், அந்தமுமாய் இருக்கிறேன் என்கிற நாமத்தை புரட்டி அல்லாவாக மாற்றி அந்த ஜனங்களையும் வஞ்சிக்கிறார்கள். யாவரும் இந்த நற்க்கிரியை விசுவாசமாக வீடுகள் தோறும் செய்யுங்கள். இயேசு உங்களுக்கு ஞான ஸ்தானம் தருவார். அபிசேகிப்பார். பிள்ளையாக ஏற்றுக் கொள்வர்.

உன்னதமான தேவனுடைய பிள்ளை ஊழியக்காரன், பீட்டர் பூராடன், 8056697306.

## எமதர்மராஜன் வழிபட்ட காரணத்தால் நவகிரகங்கள் இல்லாத சில சிவாலயங்களை பார்ப்போம்!

அருட்பணி செம்மல் எஸ்.வி.சிவசம்பந்தம் தஞ்சை வடக்கு தஞ்சை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் பெருந்தலைவர் மக்கள் கட்சி கும்பகோணம்-9245344808,

எமன், தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் சாபங்களை போக்கிக் கொள்ள பல்வேறு ஊர்களில் எழுந்தருளும் சிவபெருமானை தரிசனம் செய்து அதிலிருந்து விடுதலை பெறுகிறார். அவ்வாறு அவர் பூஜித்த, தரிசனம் செய்த சிவாலயங்கள் பல இருந்தாலும் இவ்விதழில் சில முக்கியமான சிவாலங்களை பார்ப்போம். அவ்வாறு எமன் பூஜித்த ஆலயங்களில் நவகிரகங்கள் சன்னதி கிடையாது.

1சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில்

2.திருநல்லாறு தர்ப்பாரண்யேஸ்வரர் கோயில்

3.மயிலாடுதுறை அருகில் உள்ள கீழ்வாஞ்சியம் இக்கோயிலில் எமனுக்கு தனி சன்னதி உள்ளது.

4.கும்பகோணம் -மயிலாடுதுறை பேருந்து வழித்தடத்தில் உள்ள திருவாவடுதுறை எனும் ஊரில் உள்ள சிவஸ்தலமாகும்.

5.திருச்சிக்கு அருகில் வாழை மரத்தை ஸ்தல விருட்சமாக கொண்ட சிவஸ்தலம் ஊர் திருப்பைஞ்சலி.

6.திருக்கடவூர் எனும் ஊரில் அருள்பாலிக்கும் சிவபெருமான் மீண்டும் எமனுக்கு அவனுக்குரிய அதிகாரத்தை அளிக்கின்றார்.

7.பஞ்சபூத ஸ்தலங்களில் வாயுஸ்தலமாக விளங்கும் காளகஸ்தி எனும் ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவஸ்தலமாகும்.

8.திருவையாறுக்கு அருகில் உள்ள திருமழப்பாடி எனும் உரில் உள்ள சிவஸ்தலம்.

9.நவகிகரங்களில் புதனுக்குரிய ஸ்தலமாக விளங்கும் திருவெண்காட்டில் உள்ள சிவஸ்தலமாகும்.

10.கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியம் எனும் ஊரில் உள்ள சிவஸ்தலம்.

இவை தவிர இன்னும் நவக்கிரகங்கள் இல்லாத புகழ்பெற்ற பல சிவ ஆலயங்கள் உள்ளன. அவற்றைப் பற்றி மீண்டும் பார்ப்போம்.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

அப்பாடலில் வலங்கையரின் சான்றோர் மக்கள், சிங்கக்கொடியுடைய ஈழத் தீவினை வென்று, அங்கும் வலங்கையர் ஆட்சியை நிலைநாட்டியதால் அச்சான்றோரை "சிங்கக் கொடியுடையோன்" எனவும் பாராட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கருத்தினை உள்ளடக்கிய பாடல் வரிகள் பின்வருமாறு.

"சங்கை திங்கட் குலாதிபன்
சக்ர வர்த்தி ஈழன் வங்கிசத்தோன்
பஞ்சத் திராவிட முதல்வன்
பரம்பரைப் பாண்டியன் நாடன்
கல்விச் சங்க முடையவன்
காசு முத்திரை விடுத்தவன்
சப்த கன்னி புத்திரன்
தமிழை குறுமுனிக் குரைத்தவன்
வேப்பமாலை தரித்தவன்
மேலைவாசல் விசேடத்தோன்
கொற்கை மதுரையாண்டவன்
கோலப்பனைமீன் கேதனன்
வில்லவன் சொல்லுறுதி விடாதவன்" ஸ்ரீ என்றும்
"உயர்ந்த சிங்கக் கொடியாதிபதி
சம்பரனை வென்று இரட்டைச் சங்கேந்தினேன்
ஈழந் திறை கொண்டோன்
இலங்காபுரி வேந்தன்
செட்டித் தோளேறும் பெருமாள்
வாழைக்கிருகுலை வரக்கண்டோன்
பத்திரகாளி வரபுத்திரன்" ஸ்ரீ என்றும்
வருகின்ற வரிகளைக் காண்க.

இந்நூலின் இறுதியில் பாடல் முழுதும் இணைக்கப்பட்டுள்ளது.

அப்பாடலை திருமண வீடுகளில் பாடுவது முந்தைய நாட்களில் 'காணியாட்சி' என்ற ஒரு சிறுபான்மை சமூகத்தினர் ஆவர். நாடார் வீடுகளில் திருமணம் முடிந்ததும், ஒற்றை முரசு கொட்டி கட்டியம் கூறுவது போல் அப்பாடல்களை மணப்பந்தலில் வாழ்த்திப் பாடுவதுண்டு. அவ்வாறு பாடும் காணியாட்சிகக்காரர்களுக்கு நாடார் திருமணவீடுகளில் அதற்கென நிர்ணயித்திருக்கும் ஒரு 'படத்தரம்' அல்லது 'மானியம்' வழங்குவதுண்டு.

இந்த சமூகத்தார் முன்னை நாட்களில் வாழ்ந்த பாணர், விறலியர் போன்ற சமூகத்தாரின் ஒரு தனிப்பிரிவினர் என்பர். இந்தச் சமூகம் இந்நாட்களில் இதர சமூகத்தாருடன் கலந்து மறைந்து வருகிறது.

அவ்வாறு காணியாட்சிக்காரர்கள் இல்லாத இடங்களில் நம்மவர்களில் சிலர், அப்பாடல்களை மனப்பாடம் செய்து மணமக்களை வாழ்த்திப்பாடுவதுண்டு. இப்பாடலில் சரித்திரச் சான்று உள்ள சில பகுதிகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடலின் முடிவில், மணப் பெண்ணிற்கு பெரும் தனவந்தராகிய அவர் குடும்பத்தார் வழங்கும் சீதனங்களை அக்காலத்திய முறைப்படி ரொக்கம், நகை, கறவை மாடுகள், ஆள் அடிமைகள், மஞ்சட்காணி, நஞ்சை நிலங்கள் போன்றவைகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. சாதாரண குடும்பங்களில் சீதனமாக தகுதிக்குத் தகுந்தாற்போல் கொடுப்பது சிறியதாயினும் "ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம்,கோடி" என்று சிறப்பித்துக் கூறி கொடுப்பதுண்டு.

பெண்ணின் வீட்டில் திருமணம் நடந்தால் தம்பதிகள் வரன் வீட்டிற்குச் செல்வதற்கு நேரம் குறிப்பிடுவதுண்டு. இதற்கு மறுவீடு செல்லுதல் என்று பெயர். அவ்வாறு குறித்த நேரத்தில் தம்பதிகள் வரன் வீட்டிற்குச் செல்லும்போது குலதெய்வத்தை வணங்கி வழிபாடு செய்வர். பின்னர் கணவனது வீட்டில் தம்பதியர் வலது காலை முன் வைத்து நுழைவார்கள். ஆரத்திகள் எடுக்கப்படும். அதன் பின்னர் அக்குலக் கொடியாள் திருவிளக்கு ஏற்றுவது மற்றும் கணவன் வீட்டை சொந்த வீடாக்கி, அவ்வீட்டில் மஞ்சள், மசாலை தொட்டுக்கொடுப்பது, சமையலுக்குத் தன் கையால் அரிசி வழங்குவது போன்ற பல்வேறு சடங்குகளையும் அப்புதிய இல்லத்தரசி தொட்டுக் கொடுப்பாள் அல்லது சமையல் செய்வாள். இவை போன்ற சம்பிரதாயங்கள் நடைபெறும்.

**நாடார் திருமணங்களில் தற்காலத்திய வரன் வீட்டாரின் நவீன போக்கு:**

இக்காலத்தைப் போலவே முற்காலங்களிலும் பெண்ணைப் பெற்றவரும் "பெண்ணைக் கொடுத்தாயோ? கண்ணைக் கொடுத்தாயோ?" என்று அங்கலாய்ப்பதுண்டு. ஒரு பெண்ணைப் பெற்று அவளை அருமை பெருமையாக வளர்த்து ஒரு மணமகன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டபின் அப்பெண்ணின் எதிர்கால வாழ்க்கை ஒவ்வொரு நிலையிலும் நன்கு அமைய வேண்டுமே என்று பெண்ணைப் பெற்றவரது ஏழ்மை மனநிலை ஏக்க முறுவதுண்டு; அவளது கணவன் அவளை எவ்வாறு நடத்துவானோ? அவளது மாமியார் அவளை எவ்வாறு நடத்தி வைப்பாளோ? என்ற மனநிலைமையில் பெண் வீட்டார் எப்பொழுதும் கவலை கொண்வர்களாக இருப்பதுதான் இயல்பு. அக்காலத்திலும், "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்ற பழமொழி உண்டு.

ஆனால் இக்காலங்களில் மக்கள் தமது பெண்களை வளர்ப்பதிலும், ஆண்களுக்கு சமானமாக படிக்க வைப்பதிலும் அபரிமிதமாக செலவிட வேண்டியுள்ளது. அவ்வாறு பெருஞ்செலவில் மகளை படிக்க வைத்த பின்னர் அவள் மதிக்கும் படியாக அப்பெண்ணுக்குக் குறையாத அந்தஸ்து, படிப்பு, அதற்குத் தகுந்த பதிவியிலுள்ள கணவனைத் தேடி அலைவதில் பெண்ணைப் பெற்றோர் அதிகமான செலவிற்கும், சிரமத்திற்கும் உள்ளாகிறார்கள்.

ஒரு பெண் டாக்டராகவோ, எஞ்சினீயராகவோ, பேராசிரியையாகவோ இருந்தாலும், அவளுக்கென தகுந்த ஒரு கணவனைத் தேடி மணம் பேசும் போது வரன் வீட்டார் அவற்றையெல்லாம் மறந்து, தமது மகனை அதற்குத் தகுந்தாற்போல் படிக்க வைத்து பதவியில் அமர்த்தி வைத்ததற்கு கைமாறாக எத்தனை பவுனுக்கு நகை, எவ்வளவு தொகை, ரொக்கம்; வரனுக்கு வைரமோதிரம், ஒரு மோட்டார் அல்லது மோட்டார் சைக்கிள் போன்றவற்றை எல்லாம் கேட்கிறார்கள். மேலும் அத்தகைய வரன் வீட்டார் அவ்வாறு தரக்கூடிய பெண் எங்கிருக்கிறாள் என்று இமயம் முதல் குமரி வரை பெண் தேடி அலைவதும், அதே வேளையில் பெண் வீட்டாரும் இன்னும் கொஞ்சம் குறைத்து வாங்கக் கூடியவேறு வரன் ஒருவர் எங்கு கிடைப்பார் என்று தேடி அலைவதும் இக்காலத்தில் சர்வ சாதாரணமாக நாம் கண்கூடாகக் காணும் ஒரு பரிதாபகரமான சூழ்நிலையாகும்

நாடார் இனத்தவர் திருமணங்களில் பெரும்பாலும் 'கன்னிகாதானம்' முறையே பின்பற்றுகிறோம். அம்முறைப்படி பெற்றோர் தமது பெண்ணுக்கு அவர்கள் வாழச் செல்லும் இடங்களில் எதிர்கால வாழ்விற்கு அனுசரணையாக 'சீதனம்' என்ற பெயரால் அவரது சக்திக்கு இயன்றவாறு பொன்னாகவும், பொருளாகவும் வழங்கி வருவது உண்மையே. அதே சமயத்தில் நாடார்களில் சில உட்பிரிவினரும், சில ஊர்களில் வசிப்பவரும் பெண் வீட்டாருக்குப் போதிய பணம் கொடுத்தும், பெண்ணுக்கு நகை நட்டுகள் பூட்டியும், ஒரு பெண்ணை தமது மகனுக்கு மணம்முடிக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை நடந்து வந்தது. ஆனால் இக்காலத்திலோ அத்தகைய வழக்கங்கள் யாவும் எங்கோ மறைந்து போயின மற்றும் சில இடங்களில் வரன் வீட்டார் பெண் வீட்டாரிடம் அவர்கள் பெண்ணிற்கு எவ்வளவு தொகை, எவ்வளவு நகை கொடுப்பீர்கள் என்று கேட்கும் போது பெண் வீட்டாரும் அதற்கு வரன் வீட்டாரின் தகுதியையும், பொருளாதார நிலையையும் தெரிந்து கொள்ளும் பொருட்டு நீங்கள் எங்கள் பெண்ணுக்கு எவ்வளவு நகை அல்லது பரிசம் போடுவீர்கள் என்று திரும்பிக்கேட்கும் வழக்கமும், பெண் வீட்டார் கொடுப்பதாகச் சொல்லும் நகைகளில் பேர்பாதியாவது பிள்ளை வீட்டார் அப்பெண்ணுக்கு பரிசம் போட தகுதியை நிர்ணயிப்பதற்கு ஆதாரமாகக் கேட்பதுண்டு. பெண் வீட்டாரிடம் வரன் வீட்டார் கேட்கும் நகையில் ஒரு பாதியாவது போடும் தகுதியிருந்தால் மட்டும் ஏற்பதுண்டு. அத்தகைய தகுதி இல்லையேல் நிர்ணயிப்பதில்லை.-

தொடரும்............

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி




## திரு. உவரி V.N.S.துரைப்பாண்டியன் M.A., M.Ed.,

முன்னாள் தலைமை ஆசிரியர், இந்து நடுநிலைப்பள்ளி, ஆறுமுகநேரி
மற்றும் கா.ஆ.மேல்நிலைப்பள்ளி, பேயன்விளை, ஆறுமுகநேரி. அவர்கள்

**கடந்த 2021-ம் ஆண்டு இதே நாளில் (30-06-2021) எங்களை விட்டு மறைந்தாலும் என்றும் எங்கள் நினைவில் வாழ்ந்து வழிகாட்டி வரும் ஒளி விளக்கிற்கு எங்கள் இதய அஞ்சலி**

இப்படிக்கு
குடும்பத்தினர்
“பராசக்தி பவனம்”, தெற்கு தெரு, நாடார் உவரி,
திருநெல்வேலி மாவட்டம்.


**D.J.P திருமண தகவல் நிலையம்**



திருமண தகவல் பணியில் 25 ஆண்டுகள் இமய சாதனை படைத்து **C.S.I. R.C** இந்து நாடார்களுக்கும் பல கோடீஸ்வர குடும்பங்களை இணைத்த **திருமதி. புஷ்பாதேவராஜ்.**
அண்ணாநகர் மேற்கு, செல்: **9840697436, 9840736513.**
**E-Mail : jai_son93@yahoo.com**

# வருந்துகிறோம்



பிறப்பு : 14.03.1950

இறப்பு : 24.06.2024

திருமதி

## V.S.சந்திரா அம்மாள்

அவர்கள்

இலங்கை தொழிலதிபர் திரு.**N.S.A.V.சுப்பிரமணியம் நாடார்** அவர்களின் மனைவியும், எங்கள் தாயாருமான **திருமதி.V.S.சந்திரா அம்மாள்** அவர்கள் நேற்று (24.06.2024) திங்கள்கிழமை மதியம் 12.30 மணியளவில் இறைவனை சேர்ந்தார். **அன்னாரது இறுதிச் சடங்கு இன்று (25.06.2024) செவ்வாய்க்கிழமை மதியம் 2.00 மணிஅளவில் பெரியபுரம் எங்கள் இல்லத்தில்** வைத்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

....... இவண்.......

| மகன்கள் | மருமகள்கள் |
|---|---|
| V.S.வேல் ஆதித்தன் | V.சுபா |
| **V.S.பிரபாகர் முருகராஜ்** | **P.சுதர்விழி** |
| V.S.கார்த்தீசன் | K.விஜயராணி |
| மகள்கள் | மருமகன்கள் |
| **R.வளர்மதி** | **ராஜன்** |
| R.மோகனசெல்வி | ரஜினிகாந்த் |

மற்றும் **குடும்பத்தினர்கள், பேரன் பேத்திகள்**

பெரியபுரம்

Cell : 9841167952, 9445875669, 9841154916



# இறைவனடி பற்றினார்

எங்களது மதிப்பிற்குரிய

தந்தை ஐயா

## திருமிகு.S.C.பாண்டியனார்

அவர்கள்

Founder Golden Cafe

Group of Companies

27.6.2024 அன்று இயற்கையில் கலந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

P.கணேஷ், P.J.மகேஷ்ராஜா

# கண்ணீர் அஞ்சலி



தமிழ்நாடு டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் தலைமை செயற்குழு உறுப்பினர் அன்பு அண்ணாச்சி அ.கணேசாநாடார் சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அண்ணாரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தமிழக வணிகர்களின் பாதுகாப்பு சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

# கண்ணீர் அஞ்சலி



நமது குலத்தோன்றல்

## அண்ணாச்சி.A.மாணிக்கவாசகம்

நிர்வாகக்குழு

இந்திய நாடார்கள் பேரமைப்பு

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



மலர்ந்தது 29.12.1953

உதிர்ந்தது 31.05.2024

## திரு. DS.ஜேசுராஜா அவர்கள்

31.05.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் அவர்களது அடக்க ஆராதனை 01.06.2024 அன்று மாலை 4.3 மணிக்கு பணகுடி CSI கல்லறைத் தோட்டத்தில் வைத்து நடைபெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோ

# வா...வியாபாரி ஆகலாம்

## 16.நம்பிக்கை

அமுதா B.பாலகிருஷ்ணன்

நம்பிக்கையை மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாமே!

நாம் பிறரை நம்புவது,
பிறர் நம்மை நம்புவது,
நம்மை நாமே நம்புவது.



நாம் பிறரை நம்புவதில் கவனமாகவும், எச்சரிக்கையாகவும், விழிப்போடும் இருக்கவேண்டும்.

நம்மை நாமே நம்புவது தன்னம்பிக்கையைக் காட்டும்.

பிறர் நம்மை நம்ப வேண்டும் - அதில்தான் நமக்குப் பெருமை.

“பிறருடைய அன்புக்குப் பாத்திரமாவதை விட, பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவதே மேல்” என்கிறார் - மெக்னால்ட் எனும் மேதை.

முதல்ல நாம யாரோட நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கணும்...?

நம்ம முதலாளியோட நம்பிக்கைக்குப் பாத்திரமா இருக்கணும் - அதுதான் முக்கியம்.

முதலாளி நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் கூட நாலைந்து பிரிவாகப் பிரிக்கலாம்.

ஒன்று, “இவன் பொய் சொல்லமாட்டான்”-னு நம்பணும்.

இரண்டு, “இவன் எல்லோரிடத்தும் அன்பாயிருப்பான் அரவணைத்துச் செல்வான்”

மூன்று, “அன்பாயிருப்பான் ஆனால் ஏமாளியாக இருக்கமாட்டான்”

நான்கு, “இவனை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கலாம், பொறுப்பா பாத்துக்குவான்”

ஐந்து, “இவனை நம்பி, கல்லாவைக்கூட கொடுத்து விட்டு, நாம நிம்மதியா எங்க வேணும்னாலும் போயிட்டு வரலாம்”-ன்னு முதலாளிக்கு நம்ம மேல நம்பிக்கை வரணும்.

எந்த அளவுக்கு முதலாளி நம்மை நம்புகிறாரோ அந்த அளவுக்கு நமக்கு அதிகமான பொறுப்புகளைத் தருவார்,

அளவுக்கு அதிகமான பொறுப்புகளைத் தரும்போது, நாம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும், தட்டிக் கழிக்கக் கூடாது.

பொறுப்பை பொறுப்போடு ஏற்றுக் கொள்ளும் போது நமக்கு அனுபவமும் வரும், திறமையும் வளரும்.

முதலாளி நம்மை நம்பி ஒப்பைக்கும் பணிகளை பொறுப்போடு செய்ய வேண்டும், வெறுப்போடு செய்யக் கூடாது.

கல்லாவைக் கூட, நம்மை நம்பி ஒப்படைக்கும் அளவிற்கு, முதலாளிக்கு நம்ம மேல நம்பிக்கை வந்து ஒப்படைத்துவிடுகிறார்.

நாமும் ஒழுங்காகப் பார்த்துக் கொள்கிறோம்.

கல்லாவுல பணம் வந்து விழுது.

பணத்தைப் பார்த்ததும் சபலம் வந்துவிடக்கூடாது.

சபலம் வந்தால் நமது வாழ்க்கையே சரிந்துவிடும்.

இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு ஒரு நல்ல பெயர் எடுத்துவிட்டு, ஒரு நொடியில் நம்மை நாசமாக்கிக் கொள்ளக் கூடாது.

பரமபதம் விளையாட்டில், பாம்பு தலையில் காய்வந்தால், சறுக்கி அதலபாதாளத்திற்கு வந்துவிடும்.

பாம்பு தலையில் காய் வருவது விதி- நாம் உருட்டும் பகடையின் எண்ணிக்கை விழுவதைப் பொறுத்தது.

பணத்தில் கை வைப்பதும் வைக்காததும் நம்முடைய மதி.

மதி கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

“என்னடே கல்லாவுல இருக்க, இருக்கும்போதே பார்த்து புத்திசாலித்தனமா நடந்துக்க, பொழைக்கிற வழியப்பாரு”-ன்னு புத்திமதி, சொல்றதுக்கு எத்தனை யோ பேர் வருவாங்க, நாம புத்தி கெட்டு போயிடக்கூடாது.

பத்து பைசாவுக்குன்னாலும் கரெக்டா கணக்கு வைக்கணும்.

எந்த செலவுன்னாலும், கொடுக்கல் வாங்கல்னாலும், ஒரு பேப்பர்லேயோ அல்லது நோட்டுலேயோ எழுதி வைத்து (முடிந்தால் தேதி, நேரம் வரைக்கும் துல்லியமாக எழுதி)கணக்குக் கொடுக்கணும்.

பெருந்தலைவர் காமராஜரைப் போல், கரைபடாத கரைத்துக்குச் சொந்தக்காரனாக நாம நடந்துக்கவேண்டும்.

“நம்ம மாடசாமிய நம்பி எத்தனை லட்சம் வேணும்னாலும் கொடுத்து வைக்கலாம். அவனை மாதிரி கை சுத்தமானவன் இன்னொருத்தன் கிடைப்பானாங்கிறதுசந்தேகம்தான்”-னு முதலாளி சொல்ற அளவுக்கு நாம நம்பிக்கைக்குப் பாத்திரமா நடந்துக்கணும்.

நம்பிக்கைத் துரோகம் பண்ணக்கூடாது.

நேர்மை தவறக் கூடாது.

நம்மிடம் நாணயமும் (பேச்சுத் திறமை) இருக்க வேண்டும். நாணயமும் (நேர்மை) இருக்கவேண்டும்.

நாணயத்தைத் (பணத்தை) தொலைத்தால் தேடிக்கொள்ளலாம், நாணயத்தைத் (நேர்மையை) தொலைத்தால் தொலைத்ததுதான்-தேடினாலும் கிடைக்காது-கெட்ட பெயர் நீங்காது.

நாணயம் என்பது, கல்லாவுல இருக்கிற பணத்தை தொடாமல் இருப்பது மட்டுமல்ல-நம் ஒவ்வோர் அங்க அசைவுகளிலும் அது ஊறிப் போயிருக்கவேண்டும்.

ஒரு கடையில் அவன் ஒரு சாதாரண குமாஸ்தா, ஆனால் எல்லா பொறுப்புக்களையும், தானே வலிய சென்று ஏற்றுக்கொண்டு, முதலாளியின் மனதில் நல்ல இடத்தில் இடம் பிடித்தவன்.

கடைக்குத் தேவையான பொருட்களைக் கூட அவன்தான் ஆர்டர் போடுவான்- சரக்கு வந்தபிறகு முதலாளி பணம் கொடுப்பார்.

ஒருநாள்., ஒரு கம்பெனி முதலாளி, அந்தக் கடைக்கு ஆர்டர் எடுக்க வந்தார்-பொதுவாக அந்தக் கம்பெனியின் பிரதிநிதிதான் வருவது வழக்கம். இவர் எப்போதாவது தான் வருவார், நலம் விசாரிப்பார், ஆர்டர் எடுப்பார்.

அன்று அவர் வந்திருந்தார், அந்தக் குமாஸ்தாவைப் பார்த்தார், பேசினார், ஆர்டர் கேட்டார்.

“நீங்க டிஸ்கவுன்ட் ரொம்ப கம்மியாத் தாரீங்களே.. அதான் உங்களுக்கு ஆர்டர் தரமனமில்லை”- என்றான். அவன்.

“இல்லியே...நாங்களும் மத்த கம்பெனி மாதிரி தானே தர்றோம்”

“இல்ல... மத்த கம்பெனியெல்லாம் நல்லா கவனிக்கிறாங்க, உங்க கம்பெனிதான் ரொம்ப கறார்.

அவர், அவனையே பார்த்தார், யோசித்தார், பிறகு, “தம்பி... உங்கிட்ட கொஞ்சம் தனியா பேசணுமே-”ன்னார்.

“சரின்னு அவனும் கவுண்டருக்கு வெளியேவந்தான்.

“என்ன..? என்றான்.

“தம்பி.. நீ அந்தக் கம்பெனிக்குக் கொடுக்கிற ஆர்டரை எல்லாம் எங்களுக்கு கொடு”

“கொடுத்தால்”

நான் உனக்குத் தனியா இரண்டு பர்சன்ட் தர்றேன்

வெறும் ரெண்டு பர்சன்ட்தானா?..

சரி மூணு பர்சன்ட் தாரேன்

“ம்ஹீம்..”

“சரி... எவ்வளவு வேணும் சொல்லு”

“அஞ்சு பர்சன்ட்..?”

“அஞ்சு பர்சன்டா...?” -அவர் யோசித்தார், பிறகு, “சரி... தர்றேன்...ஆனா எல்லா ஆடரும் எனக்குத்தான் தரணும்”

“சரி”

“இத வேற யாருகிட்டயும் சொல்லாத”

“சரி” பேரம் முடிந்தது. ஆர்டர் போட்டான்.

அந்தக் கம்பெனி முதலாளிக்கு ஏகப்பட்ட சந்தோஷம்- அவ்வளவு பெரிய கடையில், அவ்வளவு பெரிய ஆர்டர் கிடைத்ததில் அவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.-தொடரும்.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at “NEW MERIT PRINTERS” No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.

80வயதில் இலக்கிய உலகிற்கு 85 மரபு மீறா கவிதை நூல்கள் வெளியிட்டு சாதனைபுரிந்த, ஆன்மிக கவி

எனது தந்தை

அருப்புக்கோட்டை அருட்கவிஞர்.அ.காசி அவர்களின்

# எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:06.07.1936 28.7.2024 மறைவு:28.07.2016



என்றும் அவரது நினைவில் வாழும் அன்பு மகன் மற்றும் குடும்பத்தினர்

முனைவர்.கா.சுதாகரன்

(பணி நிறைவு)

முத ல்வர், எஸ்.பி.கே.கல்லூரி, அருப்புக்கோட்டை.

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 8.7.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

உறவுக்கு கைகொடுப்போம்! உரிமைக்கு குரல்கொடுப்போம்!!



பதிவு எண்: 280/2019

# அடையாறு நாடார் சங்கம்

எண். 17, அருணாசலபுரம் பிரதான சாலை, அடையாறு, சென்னை 600020.



தலைவர்
MJF. Ln. **M. இராமச்சந்திரன்** M.A



பொதுச்செயலாளர்
**R. சுந்தரேஸ்வரன்** B.E



பொருளாளர்
**T. இரவிச்சந்திரன்** B.E

கௌரவத் தலைவர்கள்:

M. குமரேசன் நாடார் ❤ R. ஈஸ்வரன் நாடார்

பேராசிரியர். Dr. P. காளிராஜ் நாடார் ❤ A. காசிராஜன் நாடார்

| துணைத் தலைவர்கள்: | அமைப்புச் செயலாளர்கள்: | செயலாளர்கள்: |
|---|---|---|
| P. நாராயணசாமி | இராணா அருண்குமார் | T.S.R. பாலமுருகன் |
| A. பழனிச்சாமி | A.S. ஆறுமுகம் | N. விஜயகுமார் |

பகுதிச் செயலாளர்கள்: K. சேகர் ❤ M. சித்திரவேல் ❤ D. மோகன்

சட்ட ஆலோசகர்: J. காளிதாஸ் B.A., B.L.

செயற்குழு உறுப்பினர்கள்:

| | | |
|---|---|---|
| K. பொன்செல்வம் | M. கண்ணன் | S.S. சத்தியசீலன் |
| P. செல்வின் | C. சீத்தாராமன் | K. கந்தசாமி |
| A. சீனிவாசன் | R. செல்வராஜ் | A. இராயப்பா வின்சென்ட் |